டெபிட் கார்டுகளுக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆர்பிஎல் வங்கியால் வழங்கப்படும் டெபிட் கார்டுகளை வழங்குவதற்கும், பயன்படுத்துவதற்கும் மேலும் கணக்கு வைத்திருப்பவருக்கு அல்லது கணக்கு வைத்திருப்பவரால் குறிப்பிடப்படக் கூடிய எந்தவொரு நபருக்கும் இந்திய ரிசர்வ் வங்கியால் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்படும் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும் பொருந்தக்கூடியவையாகும்.

ஆர்பிஎல் வங்கி அவ்வப்போது வகுக்கின்ற பிற விதிமுறைகளுடன் சேர்த்து இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் ("விதிமுறைகள்") கூடுதலாக இருக்கும். விதிமுறைகளில் செய்யப்படும் அனைத்து இணைப்புகளும் விதிமுறைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக அமையும்.

வரையறைகள்:

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில், பொருள் அல்லது சூழ்நிலைக்கு முரணாக எதுவும் இல்லாத பட்சத்தில், பின்வரும் சொற்கள்/வெளிப்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அர்த்தங்களைக் கொண்டிருக்கும்:

"கணக்கு" என்பது, இந்த அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் இயக்கப்படுவதற்குத் தகுதியான கணக்காக/கணக்குகளாக ஆர்பிஎல் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட சேமிப்பு மற்றும்/அல்லது நடப்புக் கணக்கைக் குறிக்கும்.

"கணக்கு அறிக்கை" என்பது, அன்றைய தேதியின் படி மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் மற்றும் கணக்கில் உள்ள இருப்பு மற்றும் ஆர்பிஎல் வங்கி பொருத்தமானதாகக் கருதும் பிற விவரங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய, ஆர்பிஎல் வங்கியால் அட்டைதாரருக்கு அவ்வப்போது அனுப்பப்படும் கணக்கு அறிக்கையை குறிக்கும்.

"கணக்கு வைத்திருப்பவர்" என்பது ஆர்பிஎல் வங்கியில் கணக்கு வைத்திருக்கின்ற தனிநபர்கள், தனிநபர் வணிக உரிமையாளர்கள், டிஏஎஸ்சி (அறக்கட்டளை, சங்கம், கூட்டுறவுச் சங்கங்கள், மனமகிழ் மன்றங்கள்), கூட்டாண்மை நிறுவனம், பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் எல்எல்பி நிறுவனங்கள் ஆகியவையாகும். இருப்பினும் சேமிப்புக் கணக்கு என வரும் போது, "கணக்கு வைத்திருப்பவர்" என்பது வங்கியில் அந்தக் கணக்கை வைத்திருக்கும் தனி நபர்களை மட்டுமே குறிக்கிறது.

"இணை நிறுவனம்" என்பது பின்வருவனவற்றை குறிக்கிறது மற்றும் உள்ளடக்கியது: ஆர்பிஎல் வங்கி கையகப்படுத்தியிருக்கும் அல்லது அதன் துணை நிறுவனமாக உள்ள எந்தவொரு நிறுவனமும், அல்லது ஆர்பிஎல் வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள அல்லது அதன் பொதுவான கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அல்லது 26% க்கும் அதிகமான வாக்களிப்புப் பங்குகளுடன் ஆர்பிஎல் வங்கி நேரடியான அல்லது நன்மை பயக்கும் தொடர்பு அல்லது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் எந்தவொரு நபரும். இந்த உட்பிரிவின் விளக்க நோக்கத்திற்காக, "கட்டுப்பாடு" என்பது இலக்கண மாறுபாடுகளுடன் சேர்ந்து, எந்தவொரு நபருக்கும் பயன்படுத்தப்படும்போது, அத்தகைய நபரின் மேலாண்மை மற்றும் கொள்கைகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, வாக்களிக்கும் பங்குகளின் உரிமையின் மூலமோ, ஒப்பந்தத்தின் மூலமோ அல்லது வேறு வகையிலோ வழிநடத்தும் அதிகாரமாகும்; "நபர்" என்பது நிறுவனம், சங்கம், ஒரு கூட்டாண்மை, அறக்கட்டளை அல்லது வேறு ஏதேனும் ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு அல்லது பிற சங்கங்கள் ஆகியவையாகும். "ஏடிஎம்" என்பது, இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள ஆர்பிஎல் வங்கி அல்லது குறிப்பிட்ட பகிரப்பட்ட நெட்வொர்க்கில் உள்ள எந்தவொரு தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தையும் குறிக்கும், மேலும், அட்டைதாரர் தனது அட்டையைப் பயன்படுத்தி ஆர்பிஎல்-ல் உள்ள தனது கணக்கில் உள்ள நிதியை அணுகக் கூடிய இயந்திரங்களாகும்.

"அட்டை" என்பது இந்தியாவில் உள்ள கணக்கு வைத்திருப்பவருக்கு மற்றும்/அல்லது கணக்கு வைத்திருப்பவரால் ஆர்பிஎல் வங்கியிடம் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எந்த நபருக்கும் வழங்கப்பட்ட ஆர்பிஎல் வங்கி டெபிட் கார்டைக் குறிக்கிறது.

"அட்டைதாரர்" அல்லது "வாடிக்கையாளர்" என்பது ஆர்பிஎல் வங்கியின் கணக்கு வைத்திருப்பவர் அல்லது அட்டை வழங்கப்பட்ட மற்றும் அட்டையை வைத்திருக்க/பயன்படுத்த அங்கீகரிக்கப்பட்ட கணக்கு வைத்திருப்பவரால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நபரையும் குறிக்கும்.

"உள்நாட்டுப் பரிவர்த்தனைகள்" என்பது இந்தியாவிற்குள் தனது உள்நாட்டு செல்லுபடி டெபிட் கார்டில் அட்டைதாரர் மேற்கொள்கின்ற பரிவர்த்தனைகளைக் குறிக்கிறது.

"அழைக்க வேண்டாம்" என்பது விளம்பர அழைப்புகள்/ எஸ்எம்எஸ்களைப் பெறலாமா அல்லது வேண்டாமா எனத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை உங்களுக்கு வழங்குகிறது.

"சர்வதேசப் பரிவர்த்தனைகள்" என்பது இந்தியா, நேபாளம் மற்றும் பூட்டானுக்கு வெளியே சர்வதேச செல்லுபடி டெபிட் கார்டு மூலம் அட்டைதாரர் மேற்கொள்கின்ற பரிவர்த்தனைகளைக் குறிக்கிறது.

“இன்டர்நெட் இணையதளம்” என்பது எங்கெல்லாம் வணிக நிறுவனங்களின் இணையதளங்களில் அல்லது வேறுவிதமாக, பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதற்காக அட்டைதாரரால் செய்யப்படும் பணம் செலுத்தல்களை ஏற்றுக்கொள்கின்ற அவர்களது இணையதளங்களைக் குறிக்கும், மேலும் மற்றவற்றுடன் சேர்த்து இந்த அட்டையை ஏற்றுக்கொள்வதாக விளம்பரப்படுத்துகின்ற கடைகள், அங்காடிகள், உணவகங்கள், ஹோட்டல்கள், பயன்பாட்டு நிறுவனங்கள், இரயில்வே மற்றும் விமான நிறுவனங்கள் ஆகியவையும் அடங்கும்.

"வணிக நிறுவனம்" என்பது, எந்த இடத்திலும் அமைந்துள்ள அட்டையை (விசா/ மாஸ்டர்கார்டு/ ரூபே அல்லது அத்தகைய அட்டை நெட்வொர்க்கால் வழங்கப்பட்டது) ஏற்றுக்கொள்கின்ற பருப்பொருள்

ரீதியான அல்லது மெய்நிகர் நிறுவனங்களைக் குறிக்கிறது, மேலும் கடைகள், அங்காடிகள், உணவகங்கள், ஹோட்டல்கள் மற்றும் விமான சேவை நிறுவனங்கள், ஏடிஎம்கள் மற்றும் மெயில் ஆர்டர் விளம்பரதாரர்கள் (சில்லறை விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது உற்பத்தியாளர்கள்) உள்ளிட்ட ரொக்க முன்பண முனையங்கள் ஆகியவையும் அடங்கும்.

"வணிகர்" என்பது ஒரு வணிக நிறுவனத்தைச் சொந்தமாக வைத்திருக்கின்ற அல்லது நிர்வகிக்கின்ற அல்லது நடத்துகின்ற எந்தவொரு நபரையும் குறிக்கும்.

"ஒரு முறை கடவுச்சொல் (OTP)" என்பது ஒரே பரிவர்த்தனைக்கு அல்லது அமர்வுக்கு மட்டுமே பயனாளரை அங்கீகரிக்கின்ற, தானாக உருவாக்கப்படும் எண்ணியல் அல்லது எண்ணெழுத்து எழுத்துக்களின் வரிசையாகும்.

"பின் (PIN) எண்" என்பது ஆர்பிஎல் வங்கியால் அட்டைதாரருக்கு ஒதுக்கப்பட்ட அல்லது அட்டைக்காக அட்டைதாரரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ரகசிய தனிப்பட்ட அடையாள எண்ணைக் குறிக்கும்.

"பிஓஎஸ் முனையம்" என்பது, மற்ற விஷயங்களுடன் கூடவே அட்டைதாரர் தனது அட்டையைப் பயன்படுத்தி, அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள கணக்கிலிருந்து நிதியை அணுகி கொள்முதல் செய்வதற்காக, இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள வணிக நிறுவனங்களில் உள்ள, அட்டைப் பரிவர்த்தனைகளைச் செயல்படுத்துகின்ற திறன் கொண்ட வணிக நிறுவனங்களின் பாயிண்ட் ஆ்ப் சேல் (பிஓஎஸ்) மின்னணு முனையங்களைக் குறிக்கும்.

"முதன்மைக் கணக்கு" என்பது அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள முதன்மைக் கணக்கைக் குறிக்கும்.

"ஆர்பிஎல் வங்கி" அல்லது "வங்கி" என்பது, இந்திய நிறுவனங்கள் சட்டம், 1913 இன் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமான, ஷாபுபுரி, கோலாப்பூர் - 416001 இல் தனது பதிவு அலுவலகத்தையும், ஒன்

இந்தியாபுல்ஸ் மையம், டவர் 2,6 வது தளம், 841 சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை 400 013 என்ற முகவரியில் கார்ப்பரேட் அலுவலகத்தையும், 9 வது தளம் டெக்னிப்ளக்ஸ்-I, வீர் சாவர்க்கர் மேம்பாலம், குர்கான் (மேற்கு), மும்பை -400062 என்ற முகவரியில் ஒரு அலுவலகத்தையும் கொண்டிருக்கின்ற மற்றும் தனது கிளைகள் மூலம் இயங்குகின்ற (ஏதேனும் வெளிப்பாடு பொருள் அல்லது அதன் சூழலுக்கு முரணாக இல்லாத பட்சத்தில் அதன் வாரிசுகள், பிரதிநிதிகள் மற்றும் ஒதுக்கப்பட்டவர்கள்), அட்டையின் உரிமையாளர்கள் / உடைமையாளர்கள் அடங்கிய ஆர்பிஎல் வங்கி லிமிட்டெட் -ஐக் குறிக்கும்.

"ஆர்பிஎல் வங்கி வாடிக்கையாளர் சேவை மையம்" என்பது ஆர்பிஎல் வங்கி வழங்குகின்ற ஆர்பிஎல் வங்கி-தொலைபேசி வங்கிச் சேவையைக் குறிக்கிறது, இது அட்டைதாரர்கள் அனைவருக்கும் கிடைக்கும். ஆர்பிஎல் வங்கி வாடிக்கையாளர் சேவை மைய வசதியைப் பெறுகின்ற அட்டைதாரர்கள் அனைவரும் இது தொடர்பாக ஆர்பிஎல் வங்கியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டவர்களாவர். அழைப்பு மையத்தை 18001 026 222 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

“ஆர்பிஎல் வங்கியின் இணையதளம்”என்பது ஆர்பிஎல் வங்கியின் இணையதளமான www.rblbank.com என்பதைக் குறிக்கும்

"பகிரப்பட்ட நெட்வொர்க்" என்பது ரூபே/விசா/மாஸ்டர்கார்டு அல்லது அட்டைகளை ஏற்றுக்கொள்ளும் வேறு எந்த நெட்வொர்க்குகளையும் குறிக்கும்.

'கட்டண விவரிப்பு இணைப்பு' என்பது இந்த அட்டையில் வழங்கப்படுகின்ற சேவைகளுக்குப் பொருந்துகின்ற கட்டணங்கள் குறித்து விவரிக்கின்ற இணைப்பு என அர்த்தமாகும். இந்தக் கட்டணங்கள் ஆர்பிஎல் வங்கியின் தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரிலான மாற்றங்களுக்கு உட்பட்டவையாகும். பொதுவாக அவ்வாறு கட்டணங்களில் செய்யப்படும் ஏதேனும் மாற்றங்கள் வருங்காலத்தில் மட்டுமே பொருந்தக் கூடியவையாக இருக்கும், மாற்றங்கள் குறித்து அட்டைதாரருக்கு 1 மாதத்திற்கு முன்பு அறிவிக்கப்படும்.

"பரிவர்த்தனைகள்" என்பது ஒரு பரிவர்த்தனையை மேற்கொள்வதற்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அட்டையைப் பயன்படுத்தி அட்டைதாரரால் வழங்கப்படும் எந்தவொரு அறிவுறுத்தலையும் குறிக்கும்.

“ஆர்பிஎல் வங்கி அல்லாத ஏடிஎம் பரிவர்த்தனை”: அட்டைதாரரால்/வாடிக்கையாளரால் ஆர்பிஎல் வங்கி அல்லாத ஏடிஎம்மில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும்.

"டோக்கன்" என்பது, அட்டையுடன் மேப் செய்யப்பட்ட ஒரு பதிலி எண்ணைக் குறிக்கிறது. டோக்கன் என்பது பணம் செலுத்துவதற்கான மாற்று வடிவ காரணியை செயல்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுவதாகும்.

"டோக்கன் சேவை" என்பது, பணம் செலுத்தல் கணக்கின் ஆதாரச் சான்றுகளின் டோக்கனைசேஷன், பணம் செலுத்த டோக்கனைஸ் செய்யப்பட்ட பணம் செலுத்தல் கணக்கின் ஆதாரச் சான்றுகளைப் பயன்படுத்துதல் மற்றும் டோக்கன் ஆயுள் - சுழற்சி மேலாண்மை போன்ற சேவைகள் வழங்கப்படுவதால், பகிரப்பட்ட நெட்வொர்க் (ரூபே/விசா/மாஸ்டர்கார்டு) மூலம் கிடைக்கின்ற, நெட்வொர்க் (ரூபே/விசா/மாஸ்டர்கார்டு) மூலம் அவ்வப்போது புதுப்பிக்கப்படுகின்ற சேவைகள் ஆகும்.

பொருள் விளக்கங்கள்:

a) ஒருமையில் குறிப்பிடப்படும் அனைத்துக் குறிப்புகளும் பன்மைக்கும், அதே போன்று பன்மைக்கான அனைத்துக் குறிப்புகளும் ஒருமைக்கும் பொருந்தும் மற்றும் "அடங்கும்" என்ற வார்த்தை "வரம்பு இல்லாமல்" என கருதப்பட வேண்டும்.
b) எந்தவொரு பாலினத்தையும் குறிப்பிடுகின்ற சொற்களில் பிற பாலினமும் அடங்கும்.
c) எந்தவொரு சட்டம், ஒழுங்குமுறை அல்லது பிற விதிகளைக் குறிப்பிடுவது என்பது, அனைத்து ஒழுங்குமுறைகள் மற்றும் பிற ஆவணங்களையும், அனைத்து ஒருங்கிணைப்புகள், திருத்தங்கள், மறு சட்டங்கள் அல்லது மாற்றீடுகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

d) அனைத்து தலைப்புகள், தடிமனான எழுத்துக்கள் மற்றும் சாய்வெழுத்துகள் (ஏதேனும் இருக்கும் பட்சத்தில்) குறிப்பிடும் சௌகரியத்துக்காக மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன, அவை இந்த விதிமுறைகளின் பொருளையோ அல்லது விளக்கத்தையோ வரையறுக்கவோ அல்லது பாதிக்கவோ செய்யாது.

e) விசா/ மாஸ்டர்கார்டு/ ரூபே/ என்பிசிஐ ஒழுங்கு முறைகள் பற்றிய குறிப்புகள், தனது நெட்வொர்க்கில் உள்ள அனைத்து உறுப்பினர் வங்கிகளுக்கும் விசா/ மாஸ்டர்கார்டு/ ரூபே/ வழங்கியுள்ள வழிகாட்டுதல்களுக்கு உரியவையாகும்.

f) பொதுப் பிரிவுகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கத்தின் விதிகள், அதன் பொருள் அல்லது சூழலுக்கு முரண்பட்டதாக இல்லாத பட்சத்தில், இங்கு இணைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்குப் பொருந்தும்.

விதிமுறைகளின் பொருந்தும் தன்மை:

விதிமுறைகள்:

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், அட்டைதாரருக்கும் ஆர்பிஎல் வங்கிக்கும் இடையேயான ஒப்பந்தத்தை உருவாக்குகின்றன. அட்டை விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிடுவதன் மூலமாகவோ அல்லது அட்டையைப் பெற்றுக் கொண்டதை எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொள்வதன் மூலமாகவோ அல்லது இந்த அட்டையின் பின்புறத்தில் கையொப்பமிடுவதன் மூலமாகவோ அல்லது அட்டையைக் கொண்டு பரிவர்த்தனை மேற்கொள்வதன் மூலமாகவோ அல்லது பிஓஎஸ் ஆக்டிவேட் செய்யக் கோருவதன் மூலமாகவோ அல்லது ஏடிஎம் மூலம் அட்டையை பயன்படுத்துவதன் மூலமாகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட அவரது முகவரிக்கு அட்டை அனுப்பப்பட்ட 10 நாட்களுக்குப் பிறகு, எந்தவித நிபந்தனையுமின்றி இந்த விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் அட்டைதாரர் ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அட்டைதாரரின் கணக்கு தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் சேர்த்து கூடுதலானவையாக இருக்கும். ஏதேனும் சேவைகள்/வசதிகள்/சலுகைகளைப் பெறுகின்ற அட்டைதாரர்கள், அந்த சேவைகள்/வசதிகள்/சலுகைகளுக்கு அவ்வப்போது ஆர்பிஎல் வங்கியால் விதிக்கப்படுகின்ற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பர். வாடிக்கையாளர் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கத் தவறினால் /

வங்கியுடனான பிற ஒப்பந்தங்கள் அல்லது கடப்பாடுகளுக்கு இணங்கத் தவறினால் / வாடிக்கையாளரின் மரணம் / திவால் நிலை / நொடிப்பு நிலை / வாடிக்கையாளருக்கு எதிராக இவை போன்ற பிற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் வங்கியானது இந்த அட்டையை ரத்து செய்யும்.

அட்டை வழங்குதல்:

கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து கோரிக்கையைப் பெறுவதன் அடிப்படையில் ஆர்பிஎல் வங்கியால் கணக்கு வைத்திருப்பவருக்கு அட்டை வழங்கப்படும். அவ்வாறு பெறப்படும் இந்தக் கோரிக்கையானது, கணக்குத் திறக்கும் போது (கணக்குத் திறக்கும் படிவத்தின் மூலம்), கணக்குத் திறந்த பிறகு கிளைக்குக் கடிதம் மூலம் கொடுக்கப்பட்டதாக இருக்கலாம். எஸ்எம்எஸ்/ மின்னஞ்சல்/ இன்டர்நெட்/மொபைல் பேங்கிங் மற்றும் தொடர்பு மையம் மூலமாகவும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளும் வழிமுறை என வாடிக்கையாளர்களுக்கு வங்கி தெரிவித்திருக்கக் கூடிய வழிமுறையின் மூலமாகவும் ஒரு வாடிக்கையாளர் அட்டைக்கு விண்ணப்பிக்கலாம். ஒரு வாடிக்கையாளர் தனது கணக்கில் வைத்திருக்க விரும்பும் அட்டை வகையைத் தேர்வு செய்து, அந்த அட்டைக்குரிய கட்டணங்களைச் செலுத்த வேண்டும். அட்டையானது தனிப்பட்ட நபர்களுக்கும், இணைந்து இயக்குதல் முறை இல்லாத போது மட்டும் தனிப்பட்ட-நபர்கள் அல்லாத வாடிக்கையாளர்களுக்கும் வழங்கப்படும். என்ஆர்ஐ கணக்கு வைத்திருப்பவரின் கோரிக்கையின் பேரில் வங்கி அதன் சுய விருப்பத்தின் பேரில் அவருக்கு டெபிட் கார்டை வழங்கலாம். இந்த அட்டையைப் உள்நாட்டுப் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தலாம், வங்கி கட்டண அட்டவணையின் அடிப்படையில் இதற்கான கட்டணம் விதிக்கப்படும். அவ்வப்போது மாறக் கூடிய தேவையான படிவங்களுடன் சேர்த்து அவசியமான ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். அவை ஆர்பிஎல் வங்கி கிளைகள் ஏற்றுக்கொள்ளுமாறு/புரிந்து கொள்ளுமாறு இருக்க வேண்டும்.

வாடிக்கையாளர்களின் டெபிட் கார்டை வேறு வகைக்கு மாற்றிக் கொள்ளும் விருப்பத்தையும் ஆர்பிஎல் வங்கி அவர்களுக்கு வழங்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில், வாடிக்கையாளர் புதிய அட்டையைப் பயன்படுத்திய பின் அல்லது புதிய அட்டையை வழங்கிய 60 நாட்களுக்குள் அவருடைய பழைய டெபிட் கார்டு தடை செய்யப்படும். இவ்வாறு மாற்றிக் கொள்வதற்கான கட்டணங்கள் அவ்வப்போது மற்றும் அந்தந்த சூழ்நிலையைப் பொறுத்து மாறுபடலாம். ஒரு வாடிக்கையாளரிடம் இருந்து அத்தகைய கோரிக்கையைப் பெற்றுக் கொள்ளும் முன்பாக, அதற்கான கட்டணங்கள் குறித்து முன்கூட்டியே அவருக்குத் தெரிவிக்கப்படும்.

அட்டையை செயல்பாட்டுக்குக் கொண்டுவருதல்:

டெபிட் கார்டு செயல்படாத நிலையிலேயே வாடிக்கையாளருக்கு அனுப்பப்படும். வாடிக்கையாளர் தனது டெபிட் கார்டைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு, இருக்கின்ற வழிமுறைகளில், அதாவது மொபேங்க், இன்டர்நெட் பேங்கிங், எஸ்எம்எஸ் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றின் மூலம் பின் (PIN) எண்ணை உருவாக்க வேண்டும்.

வழங்கப்படுகின்ற/ மீண்டும்-வழங்கப்படுகின்ற போது, அட்டையானது உள்நாட்டு ஏடிஎம் மற்றும் பிஓஎஸ்களில் மட்டுமே செயல்படும். சர்வதேச, ஆன்லைன் மற்றும் காண்டாக்ட்லெஸ் போன்ற பிற அனைத்து பரிவர்த்தனை முறைகளையும், வங்கியால் அனுமதிக்கப்பட்ட மொபைல் பேங்கிங், இன்டர்நெட் பேங்கிங், கிளை, ஐவிஆர் போன்ற வழிமுறைகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் செயல்பாட்டுக்குக் கொண்டு வரலாம் . வாடிக்கையாளர் எந்த நேரத்திலும் இந்தப் பரிவர்த்தனை முறைகளை இயங்கச் செய்யலாம்/முடக்கலாம் அல்லது இத்தகைய பரிவர்த்தனை ஒவ்வொன்றுக்கும் பரிவர்த்தனை வரம்பை அமைக்கலாம்.

அட்டையின் பலன்கள்:

எந்த ஏடிஎம்மிலும்/ ஆர்பிஎல் வங்கிக் கிளையில் அட்டைதாரர் பணம் எடுக்கலாம்/அணுகலாம், வணிக நிறுவனங்களில் பணம் செலுத்தலாம் (ஆன்லைன் அல்லது ஆஃப்லைன்), ஏடிஎம்களில்/ ஆர்பிஎல் வங்கி வாடிக்கையாளர் சேவை மையம் கார்டைப் பயன்படுத்துவதன் மூலம் அவரது கணக்கு இருப்பு பற்றிய தகவல், குறைந்த எண்ணிக்கையிலான பரிவர்த்தனைகளுடன் மினி ஸ்டேட்மெண்ட் அல்லது அவ்வப்போது ஆர்பிஎல் வங்கியால் குறிப்பிடப்படும் அத்தகைய சேவைகள் ஆகியவற்றைப் பெறலாம். இந்த அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய சேவைகள் எதையேனும் பெறும் அட்டைதாரர்கள் ஆர்பிஎல் வங்கியால் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அத்தகைய சேவைகள் தொடர்பாக அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள். உள்நாட்டு பரிவர்த்தனைகள் மற்றும் சர்வதேச பரிவர்த்தனைகளுக்கு பயன்படுத்துவதற்கு அந்தந்த அட்டைகள் ஏடிஎம்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் செல்லுபடியாகும். இருப்பினும், இந்தியா, நேபாளம் மற்றும் பூட்டானில் உள்ள வணிக நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு உள்நாட்டு பரிவர்த்தனைக்கும் அந்நியச் செலாவணியில் பணம் செலுத்துவதற்கு இந்த அட்டை செல்லுபடியாகாது. இந்த அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதத்தின் இறுதி நாள் வரை இந்த அட்டை செல்லுபடியாகும். பரிவர்த்தனையை மேற்கொள்ளும் போது, ஆர்பிஎல் வங்கியானது அட்டையுடன் இணைக்கப்பட்ட முதன்மைக் கணக்கில் உடனடியாகப் பற்று வைக்கும்.

தனிப்பட்ட அடையாள எண்:

அட்டைதாரர் அட்டையைப் பயன்படுத்துவதை அனுமதிக்க, இருக்கின்ற வழிமுறைகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் வாடிக்கையாளர் தானே டெபிட் கார்டு பின் (PIN) எண்ணை உருவாக்கிக்கொள்ளலாம். ஆர்பிஎல் வங்கி பின் எண்ணை வழங்கும்போது, அட்டைதாரரைத் தவிர வேறு யாருக்கும் தெரிவிக்கப்படக் கூடாது என்பதில் இயன்ற வரை மிகுந்த அக்கறையையும் எச்சரிக்கையையும் கடைப்பிடிக்கிறது. தற்போது பின் எண் அமைக்கின்ற முறையானது வாடிக்கையாளரின் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணிலிருந்து மோபேங்க், நெட் பேங்கிங், ஐவிஆர் மற்றும்

எஸ்எம்எஸ் மூலம் மேற்கொள்ளப்படும் துவங்குதல் வாயிலாக செய்யப்படுகிறது. இந்த பின் எண்ணை, அட்டைதாரர் தனது சுயமான இடர்பாடு ஏற்பின் கீழ், ஆர்பிஎல் வங்கி ஏடிஎம், மொபேங்க், இன்டர்நெட் பேங்கிங், ஐவிஆர் அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணிலிருந்து REPIN என்ற செய்தியை அனுப்புவதன் மூலம் மாற்றிக் கொள்ளலாம். பின் எண்ணைப் பயன்படுத்துவதன் மூலம், அட்டை செயல்படுகிறது என்பதையும், கணக்கிற்கான அணுகலை வழங்குகிறது என்பதையும் அட்டைதாரர் ஒப்புக் கொள்கிறார், தெரிவிக்கிறார் மற்றும் உத்தரவாதம் அளிக்கிறார். பின் எண் பயன்பாடு, இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பிற்கும் மற்றும் அந்தப் பின் எண்ணைப் பயன்படுத்தி கணக்கில் உள்ளிடப்பட்ட அனைத்து ஆர்டர்கள் மற்றும் விவரங்கள் மாற்றங்களுக்குமான முழுப் பொறுப்பையும் அட்டைதாரர் ஏற்றுக்கொள்கிறார். பின் எண் மூன்றாம் தரப்பினருக்குத் தெரியக் கூடிய வகையில், அட்டைதாரர் எந்த வடிவத்திலும் பின் எண்ணைப் பதிவு செய்து வைக்கக் கூடாது. பின் எண் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனைகளையும், அறிவுறுத்தல்களையும் மேற்கொள்வதற்கு ஆர்பிஎல் வங்கிக்கு வெளிப்படையான அதிகாரத்தை அட்டைதாரர் வழங்குகிறார், அதைத் திரும்பப் பெற முடியாது. அட்டைதாரரின் பின் எண்ணைச் சரிபார்ப்பதைத் தவிர, அட்டைதாரர் அனுப்பிய அல்லது அனுப்பியதாகக் கூறுகின்ற பரிவர்த்தனை அறிவுறுத்தலின் நம்பகத்தன்மையை சரிபார்க்க வேண்டிய எந்தக் கடமையும் ஆர்பிஎல் வங்கிக்கு இல்லை. அனைத்து நேரத்திலும் பின் எண்ணின் பாதுகாப்பைப் பராமரிப்பதற்காக அனைத்து உரிய நடவடிக்கைகளையும் அட்டைதாரர் எடுக்க வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டும், அவ்வப்போது ஆர்பிஎல் வங்கியால் குறிப்பிடப்படுகின்றவாறும், அட்டை மற்றும்/அல்லது பின் எண்ணை ஏதேனும் முறையற்ற/ மோசடியான/அங்கீகரிக்கப்படாத/ போலியான/தவறான முறையில் பயன்படுத்தும் பட்சத்தில், அட்டைதாரருக்கு ஆர்பிஎல் வங்கி எந்தப் பொறுப்பும் ஏற்காது. ஏதேனும் மூன்றாம் தரப்பினரின் கைகளில் அட்டை கிடைப்பதால் அல்லது மூன்றாம் தரப்பினருக்குப் பின் எண் தெரிய வருவதன் காரணமாக ஏதேனும் மூன்றாம் தரப்பினர் இந்த அட்டையைப் பயன்படுத்துவதால்/தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு விளைவுகளுக்கும் ஆர்பிஎல் வங்கி பொறுப்பேற்காது. கணக்கு உள்ளிட்ட சேவைகளை ஏதேனும் மூன்றாம் தரப்பினர் அணுகும் பட்சத்தில், அதற்கு

அட்டைதாரரே பொறுப்பாவார், மேலும் அத்தகைய அணுகல் மற்றும் பயன்பாடு அல்லது வேறு விதத்தில் மூன்றாம் தரப்பினரால் அந்த தவறான பயன்பாடு/பயன்பாட்டால் ஏற்படுகின்ற எந்தவொரு பொறுப்பு, செலவுகள் அல்லது சேதங்களுக்காக ஆர்பிஎல் வங்கிக்கு இழப்பீடு வழங்குவார்.

அட்டை செல்லுபடியாகும் காலம்:

அட்டையின் முன்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதம்/வருடத்தின் கடைசி தேதி வரை இந்த அட்டை செல்லுபடியாகும். அட்டை காலாவதியாகும் போது அட்டைதாரர் அதனைப் பல்வேறு துண்டுகளாக வெட்டி அழிக்கிறார். காலாவதியாகும் போது அட்டையைப் புதுப்பிக்கும் முழு உரிமையையும் ஆர்பிஎல் வங்கி கொண்டுள்ளது.

தொலைந்த அல்லது திருடு போன அட்டைகள்:

அட்டை தொலைந்து போனாலோ அல்லது திருடு போய் விட்டது என்றாலோ, அது குறித்து அட்டைதாரர் உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் செய்து, அதன் நகலை ஆர்பிஎல் வங்கிக்கு அனுப்ப வேண்டும். ஆர்பிஎல் வங்கியின் வாடிக்கையாளர் சேவை மையங்களுக்கு தொலைபேசி அழைப்பு மூலமாகவோ அல்லது ஆர்பிஎல் வங்கியின் கிளைக்கு எழுத்துபூர்வமாகவோ அல்லது ஆர்பிஎல் வங்கி ஏற்றுக்கொள்ளக் கூடிய பிற முறைகளில் தகவல் தெரிவிப்பதன் மூலமாகவோ அட்டையை தொலைந்ததை அட்டைதாரர் தெரிவிக்கலாம். மேலும் விவரங்களுக்கு, http://bitly.ws/suwH என்ற இந்த URL-ஐக் கிளிக் செய்யவும். வாடிக்கையாளர் சேவை மையத்தைத் தொடர்பு கொள்ளும் விவரங்கள் ஆர்பிஎல் வங்கியின் இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ளது. போதுமான சரிபார்ப்பிற்குப் பின்னர் ஆர்பிஎல் வங்கியின் ஒரு வேலை நாளில் அந்த அட்டையை ஆர்பிஎல் வங்கியானது கருப்புப் பட்டியலில் சேர்க்கும்/தடை செய்யும். அட்டைதாரர் தனது அட்டையை வெளிநாட்டில் தொலைத்துவிட்டால், அவர் மேற்கண்ட நடைமுறையைப் பின்பற்றலாம் அல்லது விசா/மாஸ்டர்கார்டு உலகளாவிய அவசரநிலை உதவிக்கான தொலைபேசி எண்கள் மூலம் அட்டை தொலைந்து போனது குறித்துப் புகாரளிக்கலாம்; இந்த சேவைகளைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்களை அட்டைதாரர் ஏற்க வேண்டும். அட்டையின் பாதுகாப்பிற்கு

அட்டைதாரரே பொறுப்பாவார், அதன் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்ள வேண்டும்.

அட்டையைத் திரும்ப ஒப்படைத்தல்/ மாற்றுதல்:

அட்டைதாரருக்கு வழங்கப்பட்டுள்ள அட்டையானது ஆர்பிஎல் வங்கியின் சொத்தாகவே நீடிக்கும், மேலும் கோரிக்கையின் பேரில் ஆர்பிஎல் வங்கியிடம் ஒப்படைக்க வேண்டும். அட்டைதாரருக்கு இனி சேவைகள் தேவையில்லை எனும் பட்சத்திலோ அல்லது எந்தவொரு காரணத்திற்காகவும் சேவைகளை ஆர்பிஎல் வங்கி திரும்பப் பெற்றுக் கொள்கின்ற பட்சத்தில், அட்டையை ரத்துசெய்வதற்காக அட்டைதாரர் அதனை ஆர்பிஎல் வங்கியிடம் திருப்பி ஒப்படைப்பார். எந்தவொரு தொலைந்த/ திருடு போன அட்டை உட்பட, ஆர்பிஎல் வங்கி, தனது முழுமையான சுய விருப்பத்தின் பேரில், அட்டைதாரர்களுக்கு ஒரு புதிய பின் எண்ணுடன் கூடிய மாற்று அட்டையை வழங்கலாம்.

நிறுத்தம்:

இந்த அட்டையைக் குறுக்குவாட்டில் இரண்டு துண்டுகளாக வெட்டி, அத்துடன் ஆர்பிஎல் வங்கிக்கு எழுத்துப்பூர்வமான அறிவிப்பை வழங்குவதன் மூலம் எந்த நேரத்திலும் அட்டைதாரர் இந்த அட்டையை இடை-நிறுத்தலாம்/ நிறுத்தலாம், எழுத்துபூர்வமான அறிவிப்பைப் பெற்றுக் கொண்டதாக ஆர்பிஎல் வங்கியால் முறையாக ஒப்புக்கொள்ளப்படுவதன் பேரில் ஏற்படும் அனைத்துக் கட்டணங்களுக்கும் அட்டைதாரரே பொறுப்பாவார். எந்த நேரத்திலும், அறிவிப்புடன் அல்லது இல்லாமல், ஆர்பிஎல் வங்கியின் முழுமையான சுய விருப்பத்தின் பேரில்,ஆர்பிஎல் வங்கியானது இந்த அட்டையை நிறுத்தலாம்.

பயன்படுத்தும் வழிமுறைகள்:

1. அனைத்து நேரங்களிலும் அட்டையைப் பாதுகாப்பான இடத்தில் வைப்பதை அட்டைதாரர் உறுதி செய்ய வேண்டும், மேலும், எந்தச் சூழ்நிலையிலும் அட்டையை வேறு யாரும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது. அட்டையைப் பெற்றவுடன் அட்டைதாரர் உடனடியாக அதில் கையெழுத்திட வேண்டும். அட்டையின் பாதுகாப்பான பயன்பாட்டிற்கான ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக,

முதல் பயன்பாட்டிற்குப் பிறகு பின் எண்ணை (ஆர்பிஎல் வங்கியால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால்) மாற்றி விட்டு, வேறு ஒரு புதிய பின் எண்ணை அட்டைதாரர் தேர்வு செய்ய வேண்டும். ஆர்பிஎல் வங்கியால் வழங்கப்படும் அனைத்து வசதிகளுக்கும் மற்றும் தொடர்புடைய அனைத்து கட்டணங்களுக்கும் அட்டைதாரர் பொறுப்பாவார், மேலும் அட்டை மற்றும் ஆர்பிஎல் வங்கியுடனான அனைத்துப் பரிவர்த்தனைகள் தொடர்பாக நல்லெண்ணத்துடன் அட்டைதாரர் செயல்பட வேண்டும். அட்டைதாரருக்கு அறிவிப்பு வழங்கிய பின்னர், அட்டையால் ஆதரிக்கப்படுகின்ற பரிவர்த்தனை வகைகளை மாற்றுவதற்கான உரிமை ஆர்பிஎல் வங்கிக்கு உள்ளது. ஏதேனும் ஆர்பிஎல் வங்கியின் வாடிக்கையாளர் சேவை மையங்களில் ஆர்பிஎல் வங்கியின் கணக்கு/அட்டையைப் பராமரிப்பதில் ஏதேனும் பிழையோ அல்லது முறைகேடோ நடைபெற்றால், அட்டைதாரர் உடனடியாக ஆர்பிஎல் வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.

2. அழைக்க வேண்டாம் சேவையைப் பயன்படுத்துவதன் மூலம் விளம்பரச் சலுகை செய்திகளைப் பெறாமல் இருக்கின்ற விருப்பத்தை அட்டைதாரர் தேர்வு செய்யலாம்.

3. உரிய ஒழுங்குமுறை அதிகார அமைப்புகளால் அவ்வப்போது மாற்றியமைக்கப்படும் வெளிநாட்டு ஆன்லைன் அந்நியச் செலாவணி வர்த்தகம் உள்ளிட்ட எந்தவொரு அல்லது அனைத்து தடை செய்யப்பட்ட பரிவர்த்தனைகளுக்கும் இந்த டெபிட் கார்டைப் பயன்படுத்தக் கூடாது. இந்த விளைவுக்கான தற்போதைய வழிகாட்டுதல்களை கடைபிடிக்க வேண்டிய பொறுப்பு டெபிட் அட்டைதாரருக்கு உள்ளது.

அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படும் சூழ்நிலையில் பொறுப்பு

அட்டை தொலைந்து அல்லது திருடு போய் விடுகின்ற பட்சத்தில் அல்லது அட்டையில் ஏதேனும் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும் பட்சத்தில், உடனடியாக ஆர்பிஎல் வங்கியிடம் அந்த தொலைந்து போகுதல்/திருட்டு குறித்து அட்டைதாரர் புகார் செய்ய வேண்டும். ஆர்பிஎல் வங்கியின் 24 மணிநேர வாடிக்கையாளர் சேவை

மையத்தை அழைப்பதன் மூலமாகவோ அல்லது ஆர்பிஎல் வங்கியின் கிளையை எழுத்துப்பூர்வமாகத் தொடர்பு கொள்வதன் மூலமாகவோ அல்லது ஆர்பிஎல் வங்கி ஏற்றுக்கொள்ளக் கூடிய பிற வழிமுறைகள் மூலமாகவோ அட்டை தொலைந்து போகுதல்/திருட்டு குறித்து அட்டைதாரர் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைக்காக(ஏடிஎம் -இல் பணம் எடுத்தல் மற்றும் ஆன்லைன் டெபிட் கார்டு பயன்பாடு தவிர) இந்தப் பிரிவின் விதிமுறைகளின் எல்லை வரையிலும், அவற்றுக்கேற்பவும், அட்டைதாரர் எந்தவித நிதிசார் பொறுப்பையும் ஏற்க மாட்டார் அந்த அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை குறித்து அவர் உடனடியாக எழுத்துப்பூர்வமாக ஆர்பிஎல் வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும், ஆர்பிஎல் வங்கியின் கருத்துப்படி, அவர் அலட்சியமாக இருந்ததாகவோ, மோசடி அல்லது கூட்டுச் சதியில் ஈடுபட்டவராகவோ கருதப்பட மாட்டார் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு, பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் மட்டுமே, அட்டைதாரருக்கு இந்த நன்மை கிடைக்கும்:

1. ஆர்பிஎல் வங்கி வகுத்துள்ள நடைமுறைக்கேற்ப அட்டை தொலைந்துவிட்டதாக/திருடப்பட்டதாக அட்டைதாரர் முறையாகப் புகாரளிக்கப்பட்டு, அந்த அட்டை தொலைந்து போகுதல்/திருட்டு குறித்து புகாரளிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை ஆர்பிஎல் வங்கியிடம் அட்டைதாரர் சமர்ப்பித்தால்; கூறப்பட்ட அந்த அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை/பரிவர்த்தனைகள் ஆர்பிஎல் வங்கிக்கு அந்த அட்டையின் தொலைந்து போகுதல்/திருட்டு குறித்துத் தெரிவிக்கப்பட்ட தேதிக்கு 15 நாட்களுக்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்டு இருந்தால்;
2. அட்டை தொலைந்து போகுதல்/திருட்டு குறித்து தெரிவிக்கின்ற நாளுக்கு 3 மாதங்களுக்கு முன்னதாக, அட்டைதாரர் அந்த அட்டையைப் பயன்படுத்தி குறைந்தது ஒரு வாங்குதல் பரிவர்த்தனையாவது மேற்கொண்டிருக்கும் பட்சத்தில்; மற்றும்
3. அட்டைதாரரின் மொபைல் எண்ணை மொபைல் பேங்கிங் மற்றும் பரிவர்த்தனை எஸ்எம்எஸ் வசதிக்காக ஆர்பிஎல் வங்கியில் அவர் பதிவு செய்திருக்கும் பட்சத்தில்.

இருப்பினும், ஆர்பிஎல் வங்கி தனது முழு சொந்த விருப்பத்தின் பேரில், காப்பீட்டுத் தொகையின் கூறப்பட்ட பலனை அட்டைதாரருக்கு வழங்குவதற்கு முழுமையாக மறுக்கலாம் அல்லது அத்தகைய விசாரணை/சோதனையின் போது ஏற்படுகின்ற கூடுதல் செலவுகளை அவர் மீது விதிக்கலாம்:

1. ஆர்பிஎல் வங்கி, தனது தனிப்பட்ட கருத்தின் அடிப்படையில், கிடைக்கக் கூடிய சான்றுகளின் அடிப்படையில் (அட்டைதாரர் வழங்குகின்ற மற்றும்/ அல்லது வேறு விதமாகப் பெற்ற) கணக்கு அல்லது அட்டையைக் கையாள்வதில் (அட்டையை அல்லது கணக்கு அல்லது பின் எண்ணைப் பாதுகாப்பது உட்பட) அட்டைதாரர் மிகவும் அலட்சியமாக இருந்து அல்லது மோசடி செய்து, இழப்பு அல்லது அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் குறித்து புகாரளிக்கிறார் எனத் தீர்மானிக்கின்ற பட்சத்தில் மற்றும்/அல்லது
2. ஒருவேளை ஆர்பிஎல் வங்கி, தனது தனிப்பட்ட கருத்தின் அடிப்படையில், அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் மற்றும்/அல்லது வணிகர் வகைகள் உள்ளிட்டவற்றுக்கு கூடுதல் விசாரணைகள் தேவை எனத் தீர்மானிக்கின்ற பட்சத்தில்; மற்றும்/அல்லது
3. அட்டைதாரரின் முன் கணக்கு வரலாறு திருப்திகரமாக இல்லை என்றால்.

அட்டைகள் மீதான காப்பீட்டுப் பாதுகாப்பானது தவறான பயன்பாடு/அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. மோசடியான பரிவர்த்தனை நிரூபிக்கப்பட்டால், அட்டை வகையின் மீது செயல்படுத்தப்பட்டுள்ள காப்பீட்டு வரம்பின் அளவிற்கு காப்பீட்டுப் பாதுகாப்பு வழங்கப்படும், அது மூன்றாம் தரப்புக் காப்பீட்டாளரால் செலுத்தப்படும்.

வாடிக்கையாளரின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு:

(a) வாடிக்கையாளரின் பூஜ்ஜியப் பொறுப்பு

1. பின்வரும் நிகழ்வுகளில் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை நிகழும் போது பூஜ்ஜிய பொறுப்புக்கான வாடிக்கையாளரின் உரிமை தோன்றுகிறது:

i. வங்கியின் தரப்பில் மோசடி/ அலட்சியம்/ குறைபாடு (பரிவர்த்தனை வாடிக்கையாளரால் தெரிவிக்கப்பட்டதா, இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல்).

ii. குறைபாடு வங்கியிடமோ அல்லது வாடிக்கையாளரிடமோ இல்லாமல், கணினியில் வேறு இடத்தில் மூன்றாம் தரப்பு மீறல் ஏற்பட்டு, அந்த அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை தொடர்பாக வங்கியிடமிருந்து தகவல் பரிமாற்றத்தைப் பெற்ற மூன்று வேலை நாட்களுக்குள் வாடிக்கையாளர் வங்கிக்குத் தெரிவிக்கிறார்.

(b) வாடிக்கையாளரின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு

2. பின்வரும் சூழ்நிலைகளில் நிகழும் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளால் ஏற்படும் இழப்புக்கு வாடிக்கையாளர் பொறுப்பேற்க வேண்டும்:

i. பணம் செலுத்தல் விவரங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற ஒரு வாடிக்கையாளரின் அலட்சியத்தால் இழப்பு ஏற்படும் சூழ்நிலைகளில், அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனையை வங்கியில் தெரிவிக்கும் வரை வாடிக்கையாளர் முழு இழப்பையும் ஏற்றுக்கொள்வார். அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை குறித்துத் தெரிவித்த பிறகு ஏற்படும் எந்த இழப்பையும் வங்கி ஏற்றுக்கொள்ளும்.

ii. அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கிப் பரிவர்த்தனைக்கான பொறுப்பு வங்கியிடமோ அல்லது வாடிக்கையாளரிடமோ இல்லாமல், கணினியில் வேறு இடங்களில் இருந்து, அத்தகைய பரிவர்த்தனை குறித்து வங்கிக்குத் தெரிவிப்பதில் வாடிக்கையாளர் தரப்பில் தாமதம் செய்யப்படும் (வங்கியில் இருந்து தகவல் தொடர்பு பெற்ற நான்கு முதல் ஏழு வேலை நாட்களுக்குள்) சூழ்நிலைகளில், வாடிக்கையாளரின் பரிவர்த்தனை ஒன்றுக்கான பொறுப்பானது அந்தப் பரிவர்த்தனையின் மதிப்பு அல்லது அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை இரண்டில் எது குறைவாக உள்ளதோ அந்தத் தொகைக்கு வரையறுக்கப்படும்.

அட்டவணை 1	
பத்தி 7 -இன் கீழ் வாடிக்கையாளரின் அதிகபட்ச பொறுப்பு (ii)	
கணக்கு வகை	அதிகபட்ச பொறுப்பு (₹)
• பிஎஸ்பிடி கணக்குகள்	5,000
• மற்ற சேமிப்புக் கணக்குகள் அனைத்தும் • பிரீ-பெய்டு பணம் செலுத்தல் ஆவணங்கள் மற்றும் கி:ப்ட் கார்டுகள் • எம்எஸ்எம்இ -களின் நடப்பு/ரொக்கக் கடன்/ ஓவர்டிரா:ப்ட் கணக்குகள் • ரூ.25 லட்சம் வரை வரம்பைக் கொண்ட தனிநபர்களின் நடப்புக் கணக்குகள்/ ரொக்கக் கடன்/ ஓவர் டிரா:ப்ட் கணக்குகள் (மோசடி சம்பவத்திற்கு முந்தைய 365 நாட்களில்) • 5 லட்சம் வரையிலான வரம்பைக் கொண்ட கிரெடிட் கார்டுகள்	10,000
• மற்ற நடப்பு/ ரொக்கக் கடன்/ ஓவர் டிரா:ப்ட் கணக்குகள் அனைத்தும் • 5 லட்சம் வரையிலான வரம்பைக் கொண்ட கிரெடிட் கார்டுகள்	25,000

மேலும், தெரிவிப்பதற்கு ஏழு வேலை நாட்களுக்கு மேல் தாமதம் செய்யப்படும் பட்சத்தில், வங்கியின் இயக்குநர் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைக்கேற்ப வாடிக்கையாளரின் பொறுப்பு தீர்மானிக்கப்படும்.

8. மேலே உள்ள பத்தி 6 (ii) மற்றும் பத்தி 7 (ii) இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, குறைபாடு வங்கியிடமோ அல்லது வாடிக்கையாளரிடமோ இல்லாமல், கணினியில் வேறு எங்கோ உள்ளது எனும் சூழ்நிலைகளில் மூன்றாம் தரப்பு மீறல்களில் வாடிக்கையாளரின் ஒட்டுமொத்த பொறுப்பு அட்டவணை 2 இல் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது:

அட்டவணை 2	
வாடிக்கையாளரின் பொறுப்பு குறித்த விளக்கம்	
தகவல்தொடர்பு கிடைத்த தேதியிலிருந்து மோசடி பரிவர்த்தனையைப் புகாரளிப்பதற்கு எடுத்துக் கொண்ட நேரம்	வாடிக்கையாளரின் பொறுப்பு (₹)
3 வேலை நாட்களுக்குள்	பூஜ்ஜியப் பொறுப்பு
4 முதல் 7 வேலை நாட்களுக்குள்	அந்தப் பரிவர்த்தனையின் மதிப்பு அல்லது அட்டவணை 1 -இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, இரண்டில் எது குறைவோ அந்தத் தொகை
7 வேலை நாட்களுக்குப் பின்னர்	வங்கியின் இயக்குநர் குழு அங்கீகரித்த கொள்கைக்கேற்றவாறு

அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வேலை நாட்களின் எண்ணிக்கையானது, தகவல் தொடர்பு பெறப்பட்ட நாளைத் தவிர்த்து, வாடிக்கையாளர் கணக்கு வைத்துள்ள கிளையின் வேலை அட்டவணைக்கேற்ப கணக்கிடப்படும். மேலும் விவரங்களுக்கு, http://bitly.ws/svVU என்ற URL -ஐக் கிளிக் செய்யவும்.

விளம்பரச் சலுகைகள்:

ஆர்பிஎல் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு மூன்றாம் தரப்பினரால் வழங்கப்படும் சலுகைகள்/ தயாரிப்புகள்/ சேவைகளை ஆர்பிஎல் வங்கியின் இணையதளத்தில் வங்கி காட்டுகிறது, இந்தச் சலுகைகள்/ தயாரிப்புகள்/ சேவைகள் எதையும் ஆர்பிஎல் வங்கி வழங்கவில்லை. கூறப்பட்ட மூன்றாம் தரப்பினருக்கோ அல்லது வாடிக்கையாளர்களுக்கோ வெளிப்படையான அல்லது மறைமுகமான முகவராக ஆர்பிஎல் செயல்படவோ அல்லது வெளிப்படுத்திக் கொள்ளவோ இல்லை. மூன்றாம் தரப்பினரால் வழங்கப்படும் சலுகைகள் / தயாரிப்புகள் / சேவைகள் தொடர்பாக ஆர்பிஎல் வங்கி உத்தரவாதம் அளிக்கவோ அல்லது பிரதிநிதித்துவம் செய்யவோ இல்லை. கூறப்பட்ட சலுகைகள்/ தயாரிப்புகள். சேவைகளுக்காக ஏதேனும் நிறுவனத்தால்/மூன்றாம் தரப்பினரால், அதன் முகவர்களால் அல்லது பிரதிநிதிகளால் வழங்கப்படும் சேவைகள்/விற்பனை/தரம்/ அம்சங்கள் ஆகியவற்றில் ஏதேனும் குறைபாடு அல்லது பற்றாக்குறைக்கு ஆர்பிஎல் வங்கி எந்த வகையிலும் பொறுப்பேற்காது. சலுகையின் காரணமாக வாடிக்கையாளர் பாதிக்கப்படக் கூடிய எந்தவொரு செயல்கள், உரிமை கோரல்கள், கோரிக்கைகள், இழப்புகள், சேதங்கள், செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகளுக்கு ஆர்பிஎல் வங்கியை பொறுப்பாகவோ அல்லது கடமைப்பட்டதாகவோ செய்ய மாட்டார் என்பதை வாடிக்கையாளர் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார். மூன்றாம் தரப்பினரின் இணையதளம் தோல்வி அல்லது இடையூறு ஏற்பட்டால் அல்லது மூன்றாம் தரப்பினரின் இணையதளத்தை அணுகுவது, அணுக இயலாமை அல்லது பயன்படுத்துதல் தொடர்பான வேறு ஏதேனும் காரணங்களால் உங்களுக்கு ஏற்படும் இழப்பு, சேதம், செலவு போன்றவற்றுக்கு ஆர்பிஎல் வங்கி பொறுப்பேற்காது. ஏதேனும் கேள்விகள், புகார்கள், சிக்கல்கள் மற்றும்/ அல்லது கருத்துகளை நேரடியாக மூன்றாம் தரப்பினருக்கு அனுப்பி மட்டுமே கையாள வேண்டும். இந்த சலுகைகள்/ தயாரிப்புகள்/ சேவைகள் மற்ற இயங்குதளங்களிலும் கிடைக்கலாம். அத்தகைய சலுகைகள்/ தயாரிப்புகள்/ சேவைகளைப் பெறுவதற்கான வாடிக்கையாளரின் பங்கேற்பு முற்றிலும் தன்னார்வமானது.

பல கணக்குகள்:

அட்டைதாரர் ஆர்பிஎல் வங்கியில் பல கணக்குகளை வைத்திருக்கும் பட்சத்தில், அட்டை வசதி இருக்கக் கூடிய வங்கி கணக்குகளின் எண்ணிக்கையை ஆர்பிஎல் தீர்மானிக்கும் என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார். பல கணக்குகளுடன் அட்டைகள் இணைக்கப்பட்டிருக்கும் சூழ்நிலைகளில், அட்டையைக் கொண்டு பகிரப்பட்ட நெட்வொர்க் ஏடிஎம்களில் செய்யப்படும் அனைத்து பரிவர்த்தனைகளும், பிஓஎஸ் டெர்மினல் பரிவர்த்தனைகளும் முதன்மைக் கணக்கில் மட்டுமே தாக்கத்தை ஏற்படுத்தும். ஆர்பிஎல் வங்கியின் ஏடிஎம்மாக இருந்தால், எந்தக் கணக்கில் அந்தப் பணத்தைப் பற்று வைக்க வேண்டும் என்பதை தேர்ந்தெடுக்கும் விருப்பம் வாடிக்கையாளருக்குக் கிடைக்கும். அட்டையைப் பயன்படுத்தி வாங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள், பணம், செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலுத்த வேண்டிய அனைத்துப் பணம் செலுத்தல்களின் மதிப்புக்கு அட்டை இணைக்கப்பட்டுள்ள கணக்குகளில் ஆர்பிஎல் வங்கி பற்று வைக்கும். அனைத்துப் பரிவர்த்தனைகளும் அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள கணக்கின்(கணக்குகளின்) கணக்கு அறிக்கையில் பிரதிபலிக்கும்.

அறிக்கைகள் மற்றும் பதிவுகள்:

ஆர்பிஎல் வங்கியின் வாடிக்கையாளர் சேவை மையத்தை அழைப்பதன் மூலம் அட்டைதாரர் தனது பரிவர்த்தனைகளின் வாய்மொழியான அல்லது எழுத்தாலான வரலாற்றைப் பெறலாம். ஆர்பிஎல் வங்கியின் இன்டெர்நெட் பேங்கிங் வசதியில் ஆன்லைனில் கிடைக்கும் கணக்கு அறிக்கையையும், ஆர்பிஎல் வங்கி ஏடிஎம்மில் மேற்கொண்ட கடைசி 10 பரிவர்த்தனைகளுக்கான பதிவுகளையும் அட்டைதாரர் சரிபார்க்கலாம். அட்டைதாரருக்குக் கிடைக்கின்ற எந்தவொரு கணக்கு அறிக்கையிலும் கணக்கின் பரிவர்த்தனைகள்/விவரங்களில் ஏதேனும் முறைகேடுகள் அல்லது முரண்பாடுகள் இருக்கும் பட்சத்தில், 15 நாட்களுக்குள் அட்டைதாரர் ஆர்பிஎல் வங்கிக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும். 15 நாட்களுக்குள் ஆர்பிஎல் வங்கிக்கு எந்த விவரங்களும் அனுப்பப்படவில்லையெனில், கணக்கு அறிக்கையும் பரிவர்த்தனைகளும் சரியானவை என்று ஆர்பிஎல் வங்கி கருதலாம். அட்டைதாரரின்

நலன்களை உறுதிப்படுத்துவதற்காக, எந்தவொரு நபரும் ஆர்பிஎல் வங்கியின் ஏடிஎம் பரிவர்த்தனைக்காக அதன் ஏடிஎம் -இல் அட்டை வசதிகளைப் பயன்படுத்தும் போது, ஆர்பிஎல் வங்கி தனது சொந்த விருப்பத்தின் பேரில் கேமரா அல்லது வீடியோ டேப்பில் பதிவு செய்யலாம். அட்டைதாரரின் அறிவுறுத்தல்களின் பேரில் மின்னணு அல்லது ஆவண வடிவிலும், விதிமுறைகளுக்குட்பட்டும், மற்ற விவரங்கள் (செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட பணம் உட்பட) மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கேமரா/வீடியோ பதிவுகளும் அத்தகைய அறிவுறுத்தல்கள் மற்றும் பிற விவரங்களுக்கு இறுதி ஆதாரமாகக் கருதப்படும்.

ஏடிஎம் பயன்பாடு:

ரகசிய பின் எண்ணைக் கொண்டு ஏடிஎம் அமைந்துள்ள இடங்களில் இந்த அட்டையைப் பயன்படுத்தலாம். பின் எண்ணைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துப் பரிவர்த்தனைகளும் அட்டைதாரரின் பொறுப்பாகும். கணக்கில்(களில்) உள்ள கிரெடிட் இருப்பைப் பொருட்படுத்தாமல், ஆர்பிஎல் வங்கியால் நாள் ஒன்றுக்கு ஒரு பரிவர்த்தனைக்கு நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட தொகையை மட்டுமே எடுக்க அனுமதிக்கப்படுவார் என்பதை அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார். இந்தத் தொகை ஆர்பிஎல் வங்கியின் இணையதளத்தில் அவ்வப்போது அறிவிக்கப்படும். இந்த வரம்பை மீறும் எந்தவொரு முயற்சியும் அவரது அட்டை வசதியை திரும்பப் பெற வழிவகுக்கும். ஏடிஎம் மூலம் ஒரு பரிவர்த்தனையை அட்டைதாரர் நிறைவு செய்யும் போது, அச்சிடப்பட்ட பரிவர்த்தனை ரசீது, அதாவது பரிவர்த்தனை சீட்டு/ஏடிஎம் ரசீது.பெறுகின்ற தேர்வை அவர் தேர்ந்தெடுக்கலாம். அட்டைதாரர் தனது அட்டையைப் பயன்படுத்தும் போது, இந்த ஏடிஎம் ரசீதில் கிடைக்கும் தொகையின் அளவு காட்டப்படும். ஏடிஎம் மூலம் உருவாக்கப்பட்ட பரிவர்த்தனைகளின் ரசீதை அட்டைதாரர் தன்னுடன் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார். கணக்கில் போதுமான அளவு பணம் இல்லாமல் இருந்தால் அட்டையைப் பயன்படுத்தி பணம் எடுக்க முயற்சிக்க மாட்டார் என அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார். கணக்கில் போதுமான இருப்பு இருப்பதை உறுதி செய்யும் பொறுப்பு முற்றிலும் அட்டைதாரரைச் சார்ந்தது.

ஆர்பிஎல் வங்கி அல்லாத ஏடிஎம் பரிவர்த்தனையின் அதிகபட்ச எண்ணிக்கையாக மாதம் ஒன்றிற்கு 50 பரிவர்த்தனைகள் அனுமதிக்கப்படலாம், அதன் பிறகு ஆர்பிஎல் வங்கி அல்லாத ஏடிஎம் பரிவர்த்தனை மேற்கொள்ள இயலாத வகையில் அட்டை தடுக்கப்படும், மேலும் இந்த வரையறுக்கப்பட்ட பயன்பாடு அடுத்த மாதத்தில் மீண்டும் வழங்கப்படும். ஆர்பிஎல் வங்கி ஏடிஎம், ஆன்லைன், பிஓஎஸ் மற்றும் காண்டாக்ட்லெஸ் பரிவர்த்தனைகளுக்கு வாடிக்கையாளர்கள் தொடர்ந்து அட்டையைப் பயன்படுத்தலாம். உதவிக்கு வாடிக்கையாளர்கள் அருகிலுள்ள கிளைக்குச் செல்லலாம் அல்லது 022 6232 7777 என்ற எண்ணில் அழைக்கலாம்.

ஆர்பிஎல் வங்கி அல்லாத ஏடிஎம் பரிவர்த்தனையில் அனுமதிக்கப்பட்ட பரிவர்த்தனைகளின் எண்ணிக்கையை அவ்வப்போது திருத்த, மாற்றியமைக்க, மாற்ற, அதன் உள்ளார்ந்த கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களை அவ்வப்போது வெளியிட உரிமை ஆர்பிஎல் வங்கிக்கு உரிமையுள்ளது.

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் வேறு எதுவும் இருந்தாலும் கூட, ஏதேனும் சந்தேகத்திற்கிடமான அல்லது மோசடியான செயல்பாடு கண்டறியப்பட்டால், ஆர்பிஎல் வங்கி தனது சுய விருப்பத்தின் பேரில் அந்த வாடிக்கையாளர்கள்/அட்டைதாரர்களால் மேற்கொள்ளப்படும் அதன் பயன்பாட்டை நிறுத்தி வைக்கும் அல்லது தடுக்கும் அல்லது அத்தகைய பரிவர்த்தனைகள் மற்றும் அட்டையின் பயன்பாட்டைத் தடுக்கும்.

வணிக நிறுவனப் பயன்பாடு:

விசா/மாஸ்டர்கார்டு மற்றும்/அல்லது ஆர்பிஎல் வங்கியால் அங்கீகரிக்கப்பட்டு, பிஓஎஸ் டெர்மினலைக் கொண்டுள்ள பிற ஏஜென்சிகளின் லோகோக்களைக் காட்சிப்படுத்துகின்ற இந்தியாவில் உள்ள அனைத்து வணிக நிறுவனங்களிலும் உள்நாட்டுப் பரிவர்த்தனைகளுக்காகவும், வெளிநாடுகளில் (சர்வதேச அட்டையின் விஷயத்தில்) உள்ள அனைத்து வணிக நிறுவனங்களிலும் இந்த அட்டை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பிஓஎஸ் டெர்மினலில் மின்னணு முறையில் அச்சிடப்பட்ட கட்டணச் சீட்டு/விற்பனைச் சீட்டு போன்றவற்றில் இந்த அட்டையானது மின்னணு பயன்பாட்டிற்கு மட்டுமே. வணிக

நிறுவனத்தில் அட்டையைப் பயன்படுத்தும் போதெல்லாம் அட்டைதாரர் கட்டணச் சீட்டில்/ விற்பனைச் சீட்டில் கையொப்பமிட வேண்டும் (அது ஒரு பின் எண் அடிப்படையிலான பரிவர்த்தனை இல்லை என்றால்) மற்றும் அவருக்கான நகலை வைத்திருக்க வேண்டும். கூடுதல் கட்டணம் செலுத்தும் பட்சத்தில் வங்கி விற்பனைச் சீட்டின் கூடுதல் நகல்களை வழங்கலாம். அட்டைதாரர் தனிப்பட்ட முறையில் கையொப்பமிடாத விற்பனைச் சீட்டு, அட்டைதாரரால் அங்கீகரிக்கப்பட்டதாக நிரூபிக்கப்படக் கூடியதாக இருக்கும் பட்சத்தில் அது அவருடைய பொறுப்பாக இருக்கும். பிஓஎஸ் டெர்மினலின் செயல்பாட்டைப் பொறுத்து அட்டைதாரரின் கையொப்பம் அல்லது பின்னின் உதவியுடன் வணிக இடங்களில் நிறுவப்பட்ட பிஓஎஸ் டெர்மினல்களில் உள்ள அட்டை செயல்படும்.பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவது உட்பட ஆனால் அவை மட்டுமல்லாமல் வணிகருடன் அட்டைதாரர் மேற்கொள்ளும் எந்தவொரு பரிவர்த்தனைகளுக்கும் வங்கி பொறுப்பேற்காது. வணிக நிறுவனம் தொடர்பாக அட்டைதாரருக்கு ஏதேனும் புகார்கள் இருக்கும் பட்சத்தில், வணிக நிறுவனத்துடன் தான் அட்டைதாரர் அந்த விஷயத்தைத் தீர்க்க வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினால் ஆர்பிஎல் வங்கிக்கான எந்தக் கடமைகளிலிருந்தும் அவரை விடுவிக்க முடியாது. இருப்பினும், அட்டைதாரர் இந்த புகாரை ஆர்பிஎல் வங்கிக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். எந்தவொரு வணிக நிறுவனத்தாலும் விதிக்கப்பட்டு, பரிவர்த்தனைத் தொகையுடன் சேர்த்து அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள கணக்கில் பற்று வைக்கப்படும் எந்தவொரு கூடுதல் கட்டணத்திற்கும் ஆர்பிஎல் வங்கி பொறுப்பேற்காது. ஆர்பிஎல் வங்கியிடமிருந்து பணம் செலுத்துவதற்காக வணிக நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட எந்தவொரு கட்டணமும் அல்லது பிற கட்டணக் கோரிக்கையும், அத்தகைய கோரிக்கையின் மீது பதிவுசெய்யப்பட்ட கட்டணம் வணிக நிறுவனத்திடம் முறையாகச் செலுத்தப்பட்டது என்பதற்கான உறுதியான சான்றாகும். அட்டை தொலைந்துவிட்டாலோ, திருடப்பட்டாலோ அல்லது மோசடியாகப் பயன்படுத்தப்பட்டாலோ தவிர, மற்ற கோரிக்கைகள், அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அட்டையைப் பயன்படுத்தும் அட்டைதாரரையே சேரும். பிழையின் காரணமாகவோ அல்லது பொருளை ரிட்டர்ன் செய்த காரணத்தினாலோ நிறைவு செய்யப்பட்ட பரிவர்த்தனையை ரத்து செய்வதற்கு அட்டைதாரர் விரும்புகிறார் என்றால், அந்த வணிகர்

முந்தைய விற்பனைச் சீட்டை ரத்து செய்ய வேண்டும், ரத்து செய்யப்பட்ட விற்பனைச் சீட்டின் நகலை அட்டைதாரர் வைத்திருக்க வேண்டும். அத்தகைய பரிவர்த்தனைகளின் காரணமாக பற்றுகள் திரும்பப்பெறுதல்/ரீஃபண்டு செய்யப்படும் பட்சத்தில் அட்டைதாரரிடம் கேட்கப்படும் போது அந்த கட்டணச் சீட்டு/விற்பனைச் சீட்டைச் சமர்ப்பிக்க வேண்டும்.

சர்வதேசப் பயன்பாடு:

a) நேபாளம் மற்றும் பூட்டானில் வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகளுக்கு இந்த அட்டை செல்லுபடியாகாது, அதாவது உள்ளூர் நாணயம் அல்லாத அல்லது இந்திய ரூபாய் அல்லாத எந்த நாணயத்திலும்.
b) இந்தியாவிற்கு வெளியே உள்ள வணிகர்களிடம் தொடங்கப்படும் பரிவர்த்தனை அந்த நாடுகளில் பின்பற்றப்படும் வழிகாட்டுதல்களைப் பொறுத்து பின் (PIN)/கூடுதல் அங்கீகாரம் இல்லாமல் செயல்படுத்தப்படலாம்.
c) சர்வதேச பரிவர்த்தனைகளுக்கு, கண்டிப்பாக இந்திய ரிசர்வ் வங்கியின் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கேற்பவே அட்டைதாரர் அட்டையைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு இணங்கத் தவறினால், அட்டைதாரரின் மீது அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம் 1999 இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும், மேலும் வங்கி அல்லது ரிசர்வ் வங்கியின் உத்தரவின் பேரில் அட்டையை வைத்திருப்பதற்குத் தடை செய்யப்படலாம். ரிசர்வ் வங்கியின் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு இணங்காததால் ஏற்படும் எந்தவொரு/அனைத்து விளைவுகளிலிருந்தும் மற்றும் அதற்கு எதிராகவும் வங்கிக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் அட்டைதாரர் ஈடு செய்வார்.
d) அவ்வப்போது ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படும் அந்நியச் செலாவணி உரிமைகளை மீறுவதால், அட்டைதாரருக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் இழப்பு அல்லது சேதம் தொடர்பாக வங்கிக்கு எந்த விதப் பொறுப்பும் இருக்காது மற்றும் பொறுப்புக்கு எதிரான பாதுகாப்பைக் கொண்டிருக்கும்.

e) வெளிநாட்டுப் பயணத்தின் போது பெறப்பட்ட மொத்தப் பரிமாற்ற வரம்பை மீறாமல் இருக்கும் பட்சத்தில், அட்டைதாரர்கள் தங்களுடைய நேர்மையான தனிப்பட்ட செலவினங்களுக்காக அவ்வப்போது ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட அந்நியச் செலாவணி உரிமைகளுக்குள் இந்த அட்டையைப் பயன்படுத்தலாம். வெளிநாட்டில் வாங்கப்படும் பொருட்களின் இறக்குமதி, சாமான்கள் விதிகள் / எக்சிம் கொள்கை அல்லது நடைமுறையில் உள்ள பிற விதிகளால் நிர்வகிக்கப்படும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட டீலர் கிளைகளில் இருந்து பயணத்திற்கு முன் பரிமாற்ற உரிமையை உறுதி செய்ய வேண்டும். தற்போதுள்ள விதிகளின் கீழ் பரிவர்த்தனையை வெளியிடுவது அனுமதிக்கப்படாத பணம் அனுப்புவதற்கு அட்டையைப் பயன்படுத்த முடியாது.

f) வெளிநாடு வாழ் இந்தியர்கள் இந்தியா/வெளிநாடுகளில் சர்வதேச டெபிட் கார்டைப் பயன்படுத்துவதால் எழும் அனைத்து என்ஆர்இ கணக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் அதை வைத்திருக்கலாம், இல்லையென்றால் அவர்களுக்கு உள்நாட்டு டெபிட் கார்டு மட்டுமே வழங்கப்படும்.

g) வெளிநாட்டு நாணயத்தை எடுக்கின்ற ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட சேவைக் கட்டணம் விதிக்கப்படும் என்பதை அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார். சேவைக் கட்டணம் எந்த அறிவிப்பும் இன்றி மாற்றப்படலாம்.

h) அனைத்து வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகளுக்கும் பயன்படுத்தப்படும் பரிமாற்ற விகிதமானது விசா/ மாஸ்டர்கார்டு/ ரூபே ஆகியவற்றால் தீர்மானிக்கப்படும், அவை அட்டைதாரர்களைக் கட்டுப்படுத்தும்.

i) அத்தகைய பரிவர்த்தனைக்கு அவ்வப்போது வழங்கப்படும் தற்போதைய விதிமுறைகளுக்கு உட்பட்டு மட்டுமே டெபிட் கார்டுகளில் சர்வதேசப் பயன்பாடு கிடைக்கும்.

j) இந்திய ரிசர்வ் வங்கி ("ஆர்பிஐ") ஜூன் 19,2018 தேதியிட்ட முதன்மை வழிகாட்டுதல்கள் / RBI/2017-18/204 சுற்றறிக்கையின்படி, தாராளமயமாக்கப்பட்ட பணம் அனுப்புதல் திட்டத்தின் (LRS) கீழ், இந்தியாவில் வசிக்கும் நபர்கள் பணம் அனுப்புவதற்காக நிரந்தர கணக்கு எண்ணை ("PAN") வழங்குவது கட்டாயமாகும். அதன்படி, திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பணம் அனுப்பும் பரிவர்த்தனைக்கும்

வசிக்கும் நபரின் (பரிவர்த்தனை செய்யும் தரப்பினர்) பான் (PAN) விவரங்கள் கட்டாயமாகும். விதிமுறைகளுக்கு இணங்க, வாடிக்கையாளர் கணக்கை தொடங்கும் போது அல்லது அதற்குப் பிறகு தனது செல்லுபடியாகும் பான் (PAN) விவரங்களை வழங்கத் தவறினால், டெபிட் கார்டில் சர்வதேச பரிவர்த்தனைகளுக்கான வசதியை வங்கி வழங்காது.

k) சர்வதேச டெபிட் கார்டுகளை இணையத்தில் அல்லது லாட்டரி சீட்டுகள், தடைசெய்யப்பட்ட அல்லது விலக்கிவைக்கப்பட்ட பத்திரிகைகள் போன்ற தடைசெய்யப்பட்டவற்றை வாங்குதல், ஸ்வீப்ஸ்டேக்குகளில் பங்கேற்றல், கால்பேக் சேவைகளுக்காக பணம் செலுத்துதல் மற்றும்/அல்லது அந்நியச் செலாவணியை எடுக்க அனுமதிக்கப்படாத பொருட்கள்/செயல்பாடுகள் போன்றுக்காக பயன்படுத்த முடியாது. அனுமதிக்கப்படுகிறது.

l) நிதியாண்டில் இந்தியாவில் உள்ள அனைத்து மூலங்களிலிருந்தும் (டெபிட் கார்டு உட்பட) வாங்கப்படும் அல்லது அனுப்பப்படும் அந்நியச் செலாவணியின் மொத்தத் தொகை, இந்தியாவில் வசிக்கும் நபர்களுக்காக இந்திய ரிசர்வ் வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட LRS இன் ஒட்டுமொத்த வரம்பிற்குள் இருக்கும். LRS-இன் கீழ் அனுமதிக்கப்பட்ட வரம்புக்கு அப்பால் பணம் அனுப்பப்பட்டால், சர்வதேச பரிவர்த்தனைகளுக்கான அட்டையைத் தடுப்பது, அதிகப்படியான பணத்தை திருப்பி அனுப்புவது போன்றவற்றை உள்ளடக்கிய தகுந்த நடவடிக்கை எடுக்க ஆர்பிஎல் வங்கிக்கு அதிகாரம் உள்ளது.

m) அனைத்து டெபிட் கார்டுகளுக்கும் சர்வதேச ஏடிஎம் பரிவர்த்தனைக்கு வெளிநாட்டு நாணய மார்க்-அப் கட்டணம் (அரசாங்கத் தீர்வைகள் உட்பட) வசூலிக்கப்படுகிறது. பரிவர்த்தனையின் போது நடைமுறையில் இருக்கும் விசா/மாஸ்டர் கார்டு பரிமாற்று விகிதம் பயன்படுத்தப்படும். சர்வதேச ஏடிஎம் பரிவர்த்தனைகளில் மற்றொரு வங்கியால் விதிக்கப்படும் கூடுதல் கட்டணங்கள் (ஏதேனும் இருந்தால்) அட்டை வைத்திருப்பவர் ஏற்க வேண்டும்.

பொறுப்பில் இருந்து விலக்குரிமை:

அட்டைதாரருக்கு அட்டை வசதியை வங்கி வழங்குவதைக் கருத்தில் கொண்டு, இதன் மூலம் அட்டைதாரர் ஆர்பிஎல் வங்கி மற்றும்/அல்லது அதன் ஊழியர்களுக்கு எந்த நேரத்திலும் அல்லது அதன் விளைவாக அல்லது அட்டைதாரருக்கு அட்டையின் கூறப்பட்ட வசதியை வழங்குவதன் மூலம் அல்லது ஆர்பிஎல் வங்கியின் நல்லெண்ணம் மற்றும் செயல்பாட்டின் காரணமாக அல்லது அட்டைதாரரின் அறிவுறுத்தல்களின் மீது நடவடிக்கை எடுக்க மறுப்பது அல்லது தவிர்ப்பது மற்றும் குறிப்பாக அட்டைதாரரின் அலட்சியம், தவறு அல்லது தவறான நடத்தை அல்லது விதிகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறுதல் அல்லது இணங்காமல் இருப்பது ஆகியவற்றால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எழுகின்ற அனைத்து நடவடிக்கைகள், கோரிக்கைகள், கோரிக்கைகள், செயல்கள், இழப்புகள், சேதங்கள், செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றுக்கு எதிராக ஆர்பிஎல் வங்கிக்குப் பாதுகாப்பு வழங்க அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார். ரிசர்வ் வங்கியின் பரிவர்த்தனைக் கட்டுப்பாடு விதிமுறைகள், அந்நியச் செலாவணி நிர்வாகச் சட்டம் (ஃபெமா) மற்றும் அவற்றின் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும்/அல்லது வேறு ஏதேனும் சட்டம்/அதிகாரத்திற்கு உட்பட்டு அட்டைதாரர் செயல்படாத காரணத்தால் ஏற்படும் எந்தவொரு மற்றும் அனைத்து விளைவுகளுக்கு எதிராகவும் ஆர்பிஎல் வங்கியைப் பாதுகாத்து, பாதிப்பில்லாமல் வைக்க வேண்டியது அட்டைதாரரின் கடமையாகும். கொரியர் மூலம் அட்டை/பின் எண் அனுப்புவதில் ஏதேனும் தவறின் காரணமாக ஏற்படும் இழப்புக்கு எதிராகவும் அட்டைதாரர் ஆர்பிஎல் வங்கிக்கு முழுமையாக பாதுகாப்பை வழங்க வேண்டும்.

மேற்கூறியவற்றிற்கு முரண்பாடு இல்லாமல், பின்வரும் காரணங்களால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் ஏதேனும் இழப்பு அல்லது சேதம் தொடர்பாக அட்டைதாரருக்கு ஆர்பிஎல் வங்கி எந்தப் பொறுப்பையும் ஏற்காது:

- வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் தரத்தில் ஏதேனும் குறைபாடு.
- எந்தவொரு நபரும் அட்டையை ஏற்க மறுப்பது

- ஆர்பிஎல் வங்கியின் கட்டுப்பாட்டில் இல்லாத ஏதேனும் கணினி முனையம்/ அமைப்பின் பழுது
- அட்டைதாரரால் வழங்கப்படாத பிற பரிவர்த்தனை அறிவுறுத்தல்களைச் செயல்படுத்துதல்.
- ஆர்பிஎல் வங்கியின் வளாகத்திற்குள் இருக்கும் ஆர்பிஎல் வங்கியின் உரிய பணியாளர்களைத் தவிர வேறு எவரிடமேனும் அட்டைதாரர் அட்டையை ஒப்படைத்தல்.
- ஆர்பிஎல் வங்கி அட்டையின் முன்புறத்தில் இடம் பெற்றுள்ள காலாவதித் தேதிக்கு முன்னதாக அட்டையை ஒப்படைக்கக் கோருவதற்கும், வாங்குவதற்கும் உள்ள தனது உரிமையை ஆர்பிஎல் வங்கி செயல்படுத்தும் போது.
- எந்தவொரு அட்டையின் பயன்பாட்டையும் நிறுத்துவதற்கான தனது உரிமையை ஆர்பிஎல் வங்கி செயல்படுத்தும் போது.
- அட்டையை திரும்பப் பெற்றுக் கொள்ளும் மற்றும்/அல்லது, அதைத் திரும்பப் பெறுவதற்கான ஏதேனும் கோரிக்கை அல்லது அட்டையை மதிக்க அல்லது ஏற்றுக்கொள்ள ஏதேனும் வணிக நிறுவனம் மறுத்ததால், அட்டைதாரரின் கடன், தன்மை மற்றும் நற்பெயருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில்.
- ஆர்பிஎல் வங்கியால் வெளியிடப்பட்ட ஏதேனும் விவரங்களில் ஏதேனும் தவறான கூற்று, தவறாகப் பிரதிநிதித்துவம் செய்தல், பிழை அல்லது ஏதேனும் விடுபட்டிருந்தால், எந்த செயல்முறை, சம்மன்கள், உத்தரவு, தடை உத்தரவு, நடவடிக்கை எடுத்தல், பற்றுரிமை ஏற்படுதல், தகவல் அல்லது அறிவிப்பு ஆகியவற்றைப் பெற்றால், சட்டப்படி தேவைப்படுவதைத் தவிர. கேள்விக்கு உட்படுத்தப்பட்ட அட்டைதாரரின் திறனை, அல்லது அட்டைதாரரால் அங்கீகரிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒருவரின் திறனை, அட்டையில் பரிவர்த்தனை செய்ய, ஆர்பிஎல் வங்கி, அதன் விருப்பத்தின் பேரில் மற்றும் அட்டைதாரருக்கு அல்லது அத்தகைய நபருக்குப் பொறுப்பேற்காமல், அனுமதிக்க மறுக்கலாம். அட்டைதாரர் தனது நிதியில் ஏதேனும் ஒரு பகுதியைப் பெற, அல்லது அத்தகைய நிதியை உரிய அதிகாரியிடம் செலுத்தி, பொருந்தக்கூடிய சட்டத்தின்படி தேவைப்படும் மற்ற நடவடிக்கைகளை எடுக்கலாம்.

அட்டைதாரரின் அட்டை தொடர்பான சட்ட நடவடிக்கையின் காரணமாக ஏற்படும் நியாயமான சேவைக் கட்டணத்தையும், நியாயமான சட்டக் கட்டணங்கள் உட்பட எந்தச் செலவுகளையும், அட்டைதாரரின் கணக்கிலிருந்து கழிப்பதற்கான உரிமையை ஆர்பிஎல் வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பின்வருவன தொடர்பாக அட்டையைத் திரும்பக் கோரும் எந்தவொரு நபரின் கூற்று அல்லது எந்தவொரு நபர் மேற்கொள்ளும் எந்தவொரு செயலும்; ஆர்பிஎல் வங்கி அல்லது ஆர்பிஎல் வங்கியின் சார்பாகச் செயல்படும் எந்தவொரு நபரும் நிலுவைத் தொகைகளைத் தீர்ப்பதற்கான கோரிக்கை அல்லது உரிமைகோரலை அட்டைதாரரிடம் வைக்கும் பட்சத்தில், அந்தக் கோரிக்கை அல்லது வேண்டுகோளானது எந்த விதத்திலும் அவதூறு பரப்பும் செயலாகவோ அல்லது தப்பெண்ணம் கொண்ட செயலாகவோ அல்லது அட்டைதாரத்தின் குணநலனைப் பிரதிபலிப்பதாகவோ இருக்காது என்பதை அட்டைதாரர் ஒப்புக் கொண்டு, ஏற்றுக்கொள்கிறார்.ஏதேனும் இயந்திரம்/இயந்திரப் பிழை/தோல்விக்கு எதிரான பாதுகாப்பை ஆர்பிஎல் வங்கிக்கு அளிக்க அட்டைதாரர் ஒப்புக் கொள்கிறார். ஆனாலும் கூட, நேரடியாக ஆர்பிஎல் வங்கியின் கட்டுப்பாட்டில் இருக்கும் தொழில்நுட்பப் பிழை/ செயலிழப்பு காரணமாக அட்டைதாரருக்கு ஏற்படும் அனைத்து நேரடி இழப்புகளுக்கும் ஆர்பிஎல் வங்கி பொறுப்பேற்கும். இருப்பினும், சாதனத்தின் திரையில் தோன்றும் செய்தி அல்லது வேறு விதமாக அதை அட்டைதாரர் அறிந்து கொள்ள முடியும் போது பணம் செலுத்தும் முறையின் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஏற்படும் எந்த இழப்புகளுக்கும் ஆர்பிஎல் வங்கி பொறுப்பேற்காது. பரிவர்த்தனையை செயல்படுத்தாத அல்லது குறைபாடுள்ள செயல்பாட்டின் போது ஆர்பிஎல் வங்கியின் பொறுப்பானது, ஆர்பிஎல் வங்கியின் கொள்கைகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டத்திற்கு/சட்டங்களுக்கு உட்பட்டு இருந்தால் அந்தப்.பரிவர்த்தனையின் முதன்மை மதிப்பு மற்றும் அதன் வட்டி அளவிற்கு மட்டுமே வரையறுக்கப்பட்டது.

வசதிகளைச் சேர்த்தல்/திரும்பப் பெறுதல்:

அட்டைதாரரின் சௌகரியத்திற்காகவும், பயன்பாட்டிற்காகவும், அட்டை, ஏடிஎம்கள், பிஓஎஸ் முனையங்கள், இணையம் அல்லது வேறுவிதத்தில் மற்றும்/அல்லது பிற சாதனங்களில் பகிரப்பட்ட நெட்வொர்க்குகள் மூலம் அட்டைதாரருக்குக் கூடுதல் சேவைகளை ஆர்பிஎல் வங்கி வழங்கலாம். இந்தச் சாதனங்களில் அட்டைதாரரால் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகள் தொடர்பான அனைத்துக் கட்டணங்களும், விதிப்புகளும் ஆர்பிஎல் வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும், அந்தக் கட்டணங்களை அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள கணக்கில் பற்று வைப்பதன் மூலம் வங்கி வசூலிக்கும். பகிரப்பட்ட நெட்வொர்க்குகள் மாறுபட்ட செயல்பாடுகளையும், சேவைகளையும் வழங்குகின்றன என்பதையும், வெவ்வேறு சேவைகளுக்கு வெவ்வேறு விதமான கட்டணங்களை வசூலிக்கலாம் என்பதையும் அட்டைதாரர் புரிந்து கொண்டு, ஒப்புக்கொள்கிறார். ஆர்பிஎல் வங்கி தனது சுயாதீன விருப்பத்தின் பேரில், எந்த நேரத்திலும், அட்டைதாரருக்கு முன்னறிவிப்புச் செய்யாமல், இந்தியாவிற்குள்/வெளியே உள்ள ஏடிஎம்கள்/பிஓஎஸ் முனையங்கள்/இன்டர்நெட் பிற சாதனங்களில் அட்டை மற்றும்/அல்லது அது தொடர்பான சேவைகளைப் பயன்படுத்துவதற்கான வசதியை திரும்பப் பெற, நிறுத்த, ரத்து செய்ய, இடைநிறுத்த/அல்லது தடை செய்ய உரிமை உண்டு, மேலும் அத்தகைய இடைநீக்கம் அல்லது தடையினால் ஏற்படும் எந்த விதமான இழப்பு அல்லது சேதத்திற்கும் ஆர்பிஎல் வங்கி அட்டைதாரருக்குப் பொறுப்பாகாது.

செயல்பாட்டுப் பொறுப்புகள்:

1. ஒருவேளை, தனிநபர் அல்லாத அட்டைதாரர்கள் தங்கள் செயல்பாட்டு முறையை கூட்டாக மாற்ற விரும்புகிறார்கள் என்றால், கணக்குக் கட்டமைப்பில் மாற்றங்கள் செய்வதற்கான வேண்டுகோளுடன், அட்டையை மூடுவதற்கான தனி வேண்டுகோளையும் அட்டைதாரர் அளிக்க வேண்டும். கணக்கின் கையொப்பமிடும் அதிகாரம் கொண்ட அட்டைதாரர் வெளியேற விரும்பும் பட்சத்தில், கணக்கு அமைப்பில் மாற்றங்கள் செய்வதற்கான வேண்டுகோளுடன், அட்டையை மூடுவதற்கான தனி வேண்டுகோளையும் கணக்குதாரர் அளிக்க வேண்டும்.

2. கணக்குகளை இயக்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நபர்களிடம் இருந்து அவ்வப்போது ஆர்பிஎல் வங்கி பெறக்கூடிய அத்தகைய அறிவுறுத்தல்கள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு செயல்படுவதற்கு ஆர்பிஎல் வங்கிக்கு நிபந்தனையின்றி, திரும்பப் பெற இயலாத வகையில் அட்டைதாரர் அங்கீகாரம் அளிக்கிறார்.
3. இதன் மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் முகவரியில், அட்டை மற்றும் பின் எண்ணை குறிப்பிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நபர்களுக்கு கூரியர் மூலம் அனுப்புவதற்கு ஆர்பிஎல் ஆர்பிஎல்வங்கிக்குவங்கிக்கு நிறுவனம் நிபந்தனையின்றி மற்றும் திரும்பப் பெற முடியாத வகையில் அங்கீகாரம் அளிக்கிறது.
4. அட்டை வசதியைப் பெற விரும்பவில்லை என்றால், அட்டைதாரர்/அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் அந்த எண்ணத்தை எழுத்துப்பூர்வமாக ஆர்பிஎல் வங்கியிடம் தெரிவிக்க வேண்டும் என்பதை அட்டைதாரர் இதன் மூலம் ஒப்புக் கொள்கிறார்.
5. அட்டைதாரர்களால் வழங்கப்பட்ட அவர்களது தனிப்பட்ட விவரங்களின் துல்லியத்திற்கு அவர்களே பொறுப்பாவார்கள். அட்டைதாரர்களின் விவரங்களில் ஏதேனும் மாற்றம் செய்யப்படும் பட்சத்தில் உடனடியாக அது குறித்து அவர்கள் வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.
6. அட்டையையும், பின் எண்ணையும் ரகசியமாக வைத்திருப்பது மற்றும் அட்டைதாரரின்/அதன் அங்கீகரிக்கப்பட்ட நபர்களின் பொறுப்பு என்பதையும், கணக்குகள் தொடர்பான விவரங்களுக்கானகளுக்கான அணுகல், முற்றிலும் அட்டைதாரரின் சுய பொறுப்பு, பொறுப்பு மற்றும் கடமை ஆகியவற்றில் இருக்க வேண்டும் என்பதையும், ஆர்பிஎல் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட அட்டை மூலம் கணக்கு தொடர்பாக ஏதேனும் அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்கவோ அல்லது பதிவு செய்யவோ முடியாது. அதற்கேற்ப அல்லது இல்லாத நபர்கள் மற்றும் அட்டை மூலம் கணக்கு மற்றும் இடமாற்றங்கள் / திரும்பப் பெறுதல் தொடர்பான தகவல்களை அணுகுவதற்கான எந்தவொரு பரிவர்த்தனைகளுக்கும் அட்டைதாரர் ஆர்பிஎல் வங்கியைப் பொறுப்பாக்கவோ அல்லது பொறுப்பேற்கச் செய்யவோ மாட்டார் என்பதையும் அட்டைதாரர் இதன்மூலம் ஒப்புக்கொள்கிறார், ஏற்றுக்கொள்கிறார், உறுதிப்படுத்துகிறார் மற்றும் உறுதியளிக்கிறார்.

7. அங்கீகரிக்கப்பட்ட நபர்களிடமிருந்து ஆர்பிஎல் வங்கி பெறுகின்ற அறிவுறுத்தல்கள் மற்றும்/அல்லது அதனுடன் தொடர்புடைய அல்லது தற்செயலான எந்தவொரு விஷயத்திலும், அட்டையைத் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் ஆர்பிஎல் வங்கியால் எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாக அவ்வப்போது மற்றும் இதன் பின் அனைத்து நேரங்களிலும் ஏற்படும் இழப்பீடுகள், உரிமைகோரல்கள், சேதங்கள், நடவடிக்கைகள், வழக்குகள், செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றில் இருந்து அல்லது அது தொடர்பாக ஏற்படும் இழப்பீடு கோரிக்கைகளுக்கு எதிராக ஆர்பிஎல் வங்கிக்கு பாதுகாப்பளிக்க அட்டைதாரர் இதன் மூலம் ஒப்புக் கொள்கிறார்.
8. அந்தக் கோரிக்கையை ஆர்பிஎல் வங்கி பெற்ற நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள், ஆர்பிஎல் வங்கிக்கு ஏற்பட்ட பண இழப்பு, தீங்கு அல்லது பாதிப்பு ஆகியவற்றிற்கு ஏற்றவாறு எந்தவொரு தொகையையும், எந்தவித எதிர்ப்போ அல்லது மறுப்போ தெரிவிக்காமல் ஆர்பிஎல் வங்கிக்குச் செலுத்துவார் எனவும் அட்டைதாரர் உறுதியளிக்கிறார்

வெளிப்படுத்தல்கள்:

அட்டையில் செலுத்த வேண்டிய தொகையை அல்லது திருப்பிச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்துவதற்கு அட்டைதாரர் தவறும் பட்சத்தில், ஆர்பிஎல் வங்கி மற்றும்/அல்லது இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) அட்டைதாரர் மற்றும்/அல்லது அதன் இயக்குநர்கள்/கூட்டாளிகள்/ இணை விண்ணப்பதாரர்களின் பெயர்கள் உள்ளிட்ட அந்த திருப்பிச் செலுத்தாத நிலை குறித்த விவரங்களை பொருந்தக்கூடிய வகையில், ஆர்பிஎல் வங்கி அல்லது ஆர்பிஐ அவர்களின் முழு விருப்பப்படி பொருத்தமாக இருக்கும் எனக் கருதும் முறையில் வெளியிடுவதற்கு அல்லது பதிப்பிப்பதற்கு முழு உரிமையைப் பெற்றிருக்கும் என்பதை அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார். அட்டைதாரரின் விவரங்கள் மற்றும் திருப்பிச் செலுத்தும் வரலாறு தொடர்பான சில அல்லது அனைத்து விவரங்களையும், விதிமுறைகள் அல்லது அட்டைக்காகச் செய்யப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும், ஆர்பிஎல் வங்கி/அதன் துணை நிறுவனங்கள் மற்றும் அவற்றின் முகவர்களை மேலே கூறிய விவரங்களின்

பயன்பாட்டிற்காகப் பொறுப்பாக்காமல், தேவைக்கேற்றவாறு தனது துணை நிறுவனங்கள்/ வங்கிகள் / நிதி நிறுவனங்கள் / கிரெடிட் பீரோக்கள் / கடன் மதிப்பீட்டு முகமைகள் / சட்டப்பூர்வ அமைப்புகள் ஆகியவற்றுடன் பகிர்ந்து கொள்வதற்கு, பரிமாறிக் கொள்வதற்கு இதன் மூலம் அட்டைதாரர் ஆர்பிஎல் வங்கிக்கு அங்கீகாரம் அளிக்கிறார்.

கட்டணங்கள் மற்றும் விதிப்புகள்:

அட்டைக்கான வருடாந்திரக் கட்டணம், வங்கியின் நடைமுறையில் உள்ள விகிதத்தில் விண்ணப்பம்/புதுப்பித்தல் ஆகியவற்றின் போது அட்டையுடன் இணைக்கப்பட்ட முதன்மைக் கணக்கில் பற்று வைக்கப்படும். இந்தக் கட்டணம் திருப்பியளிக்கப்படாது. அவ்வப்போது ஆர்பிஎல் வங்கி நிர்ணயிக்கின்ற குறைந்தபட்ச இருப்புத்தொகையை எப்போதும் கணக்கில் அட்டைதாரர் பராமரிக்க வேண்டும். அட்டை வழங்குவதற்கு அல்லது மீண்டும் வழங்குவதற்கு மற்றும்/அல்லது அட்டைதாரர் அட்டையில் மேற்கொள்கின்ற பரிவர்த்தனைகளுக்கான எந்த நேரத்திலும் ஏதேனும் கட்டணம்/விதிப்புகளை அட்டைதாரரிடம் வசூலிக்கும் உரிமை ஆர்பிஎல் வங்கிக்கு உள்ளது. அட்டையைப் பயன்படுத்துவதற்காக செலுத்தப்படும் எந்தவொரு அரசாங்க கட்டணங்கள், வரி அல்லது பற்றுகள் அல்லது வரிகள் ஆகியவை அட்டைதாரரின் பொறுப்பாகும், மேலும் ஆர்பிஎல் வங்கியின் மீது (நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ) விதிக்கப்பட்டால், அத்தகைய கட்டணங்கள், வரி அல்லது வரியை ஆர்பிஎல் வங்கியானது அந்தக் கணக்கில் பற்று வைக்கும். மேலும், பகிரப்பட்ட நெட்வொர்க்குகளின் ஆபரேட்டர்கள் தங்கள் ஏடிஎம்/பிஓஎஸ் டெர்மினல்/மற்ற சாதனத்தின் ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் கூடுதல் கட்டணத்தை விதிக்கலாம், அந்தக் கட்டணங்கள் மற்றும் பிற பொருந்தக்கூடிய கட்டணங்கள்/விதிப்புகள் ஆகியவை அட்டைதாரரின் கணக்கிலிருந்து கழிக்கப்படும். வங்கியால் அவ்வப்போது அறிவிக்கப்படும் வசதிகளுக்குத் தனி சேவைக் கட்டணங்கள் விதிக்கப்பட்டு, அவை அட்டைதாரரின் கணக்கில் இருந்து கழிக்கப்படும். இந்தக் கட்டணங்களைக் கழிப்பதற்குக் கணக்கில் போதுமான தொகை இல்லாத பட்சத்தில், மேற்கொண்டு பரிவர்த்தனைகளை மேற்கொள்வதை மறுக்கும் உரிமையை வங்கிக்கு உள்ளது. கணக்குகளை கூடுதல் எடுப்புக் கணக்குகள் என வகைப்படுத்தும் பட்சத்தில், அட்டைதாரர் உடனடியாக

கணக்கு இருப்பு நிலையை சரிசெய்ய வேண்டும். கணக்கில் அதிகமாக எடுக்கப்படும் ஒவ்வொரு சூழ்நிலையிலும், கணக்கில் உள்ள பற்று இருப்பு மீது வசூலிக்கப்படும் வட்டிக்கும் கூடுதலாக ஒரு நிலையான கட்டணம் விதிக்கப்படலாம். இந்தக் கட்டணம் அவ்வப்போது வங்கியால் நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்படும். அட்டை பரிவர்த்தனைகள் காரணமாக ஒரு கணக்கில் கூடுதலாக எடுக்கப்படும் சூழ்நிலையில், எந்த அறிவிப்பும் இல்லாமல் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ அட்டைதாரரின் பிற கணக்குகளில் இருந்து வரும் வரவுகளில் இருந்து இந்தத் தொகையை செட் ஆ்ப் செய்வதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது. விதிமுறைகளில் உள்ள எதுவும், வங்கி மற்றும் அட்டைதாரருக்கு இடையே அவ்வப்போது நிலவும் சட்டப்படி அல்லது வேறு எந்த உடன்படிக்கையின் படியும் பணம் செலுத்துதல், மாற்றுதல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றில் உள்ள வங்கியின் உரிமையைப் பாதிக்காது. மேலும், அட்டைதாரர் ஆர்பிஎல் வங்கியை தனது கணக்கிலிருந்து கழித்துக் கொள்ளவும் அங்கீகரிக்கிறார், மேலும் அட்டை தொடர்பாக அட்டைதாரர் செலுத்த வேண்டிய பணத்தை வசூலிப்பதில் ஏற்படும் எந்தச் செலவுகளுக்கும் எதிராகவும் ஆர்பிஎல் வங்கிக்கு இழப்பீடு வழங்குகிறார். (வரையறை இல்லாமல் நியாயமான சட்டக் கட்டணங்கள் உட்பட). குறைந்தபட்ச இருப்புத் தொகையைப் பராமரிக்காததற்கு, ஆர்பிஎல் வங்கி தனது சுய விருப்பத்தின் பேரில், கூடுதல்/ அபராதக் கட்டணங்களை விதிக்கலாம். குறைந்தபட்ச இருப்பு நிபந்தனைக்கும் கூடுதலாக, அவ்வப்போது அட்டைதாரருக்கு தெரிவித்து, அட்டையைப் பயன்படுத்துவதற்காக சேவை மற்றும் பிற கட்டணங்களையும் ஆர்பிஎல் வங்கி விதிக்கலாம். சர்வதேச டெபிட் கார்டு மூலம் அட்டைதாரரால் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளின் போது, விசா/ மாஸ்டர்கார்டு/ என்பிசிஐ விதிமுறைகளுக்கேற்ப ஏதேனும் விதிக்கப்பட்டால், செயலாக்கக் கட்டணங்கள், மாற்றுக் கட்டணங்கள், கட்டணங்கள் ஆகியவற்றுடன் அட்டைதாரரின் கணக்கு வைத்திருக்கும் நாணயத்திற்குச் சமமான தொகை , அத்தகைய பரிவர்த்தனைகளுக்கான வேறு ஏதேனும் சேவைக் கட்டணங்கள் இந்தியாவில் உள்ள அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள ஆர்பிஎல் வங்கியில் உள்ள கணக்கில் பற்று வைக்கப்படும். அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள கணக்கில் பற்று வைப்பதன் மூலம் அவ்வப்போது ஆர்பிஎல் வங்கி நிர்ணயிக்கும் அட்டை தொடர்பான அனைத்து கட்டணங்களையும் வசூலிப்பதற்கு ஆர்பிஎல் வங்கிக்கு அட்டைதாரர்

அங்கீகாரம் அளிக்கிறார். ஆர்பிஎல் வங்கியால் விதிக்கப்பட்டுள்ள, பொருந்தக் கூடிய கட்டணங்கள் மற்றும் விதிப்புகள் பற்றிய விவரங்கள் ஆர்பிஎல் வங்கியின் இணையதளம் மற்றும்/ அல்லது ஆர்பிஎல் வங்கியின் கிளைகளில் காட்சிப்படுத்தப்படும். தேதியின் படி பொருந்தக்கூடிய கட்டண விவரங்களுக்கு கட்டண அட்டவணையைக் காணவும் (https://www.rblbank.com/pdf-pages/service-charges).

பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம்:

டெலிவரியில் தாமதம், டெலிவரி செய்யாமை, பொருட்களைப் பெறாதது அல்லது குறைபாடுள்ள பொருட்களைப் பெறுதல் உட்பட, வணிக நிறுவனங்களிடம் அட்டைதாரர் வாங்கிய பொருட்கள், வணிக உத்திரவாதம் அல்லது சேவைகளுக்கு எந்த வகையிலும் ஆர்பிஎல் வங்கி பொறுப்பாகாது. இந்த அட்டை என்பது அட்டைதாரர் பொருட்களை வாங்குவதற்கும்/அல்லது சேவைகளைப் பெறுவதற்குமான ஒரு வசதி மட்டுமே என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும், ஆர்பிஎல் வங்கி எந்தவித உத்திரவாதமும் அளிக்கவில்லை அல்லது பொருட்களின் தரம், விநியோகம் குறித்தோ அல்லது வேறுவிதமாகவோ பிரதிநிதித்துவம் செய்யவில்லை. வணிகப் பொருட்கள் தொடர்பான ஏதேனும் தகராறு அல்லது உரிமைகோரலை அட்டை உறுப்பினரும், வணிக நிறுவனமும் மட்டுமே தீர்த்துக் கொள்ள வேண்டும். உரிமைகோரல் அல்லது முரண்பாடு இருப்பதால் ஆர்பிஎல் வங்கிக்கு செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களையும் செலுத்துவதற்கான அவருடைய கடமையிலிருந்து அட்டை உறுப்பினர் விடுபட மாட்டார், அட்டை உறுப்பினர் அத்தகைய கட்டணங்களை உடனடியாக செலுத்த ஒப்புக் கொள்கிறார்.

முரண்பாடுகள்:

அட்டையை ஏற்கவோ மற்றும்/அல்லது மதிக்கவோ ஏதேனும் வணிக நிறுவனம் மறுப்பதற்காக ஆர்பிஎல் வங்கி எந்தப் பொறுப்பையும் ஏற்காது. ஒரு வணிக நிறுவனத்துடனான பரிவர்த்தனை தொடர்பான முரண்பாடு ஏற்படும் சூழ்நிலையில்,அட்டைதாரரின் கையொப்பத்துடன் கூடிய கட்டணம்/விற்பனை சீட்டு மற்றும் அதில் குறிப்பிடப்பட்ட அட்டை எண் ஆகியவை ஆர்பிஎல் வங்கிக்கும், அட்டைதாரருக்கும் இடையே உள்ள

உடன்பாட்டின் அளவிற்கு உறுதியான ஆதாரமாக இருக்க வேண்டும். அட்டைதாரரின் திருப்திக்கு வாங்கிய/வாங்க வேண்டிய பொருட்களை அட்டைதாரர் முறையாகப் பெற்றுள்ளாரா அல்லது கிடைக்கப் பெற்ற சேவையை முறையாகப் பெற்றிருக்கிறாரா என்பதை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் ஆர்பிஎல் வங்கிக்குக் கிடையாது. கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் கட்டணம் தொடர்பாக அட்டைதாரருக்கு ஏதேனும் முரண்பாடு இருக்கின்ற சூழ்நிலையில், கணக்கு அறிக்கை தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் ஆர்பிஎல் வங்கியிடம் அட்டைதாரர் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினால் அனைத்து கட்டணங்களும் ஏற்கத்தக்கவை மற்றும் முறையானவை என்று கருதப்படும். ஆர்பிஎல் வங்கி 15 நாட்களுக்கும் மேலான கட்டணங்கள் மீதான எந்தவொரு முரண்பாட்டையும் அதன் சுயாதீன விருப்பத்தின் பேரில் ஏற்றுக்கொள்ளலாம். கருத்து முரண்பாட்டுக்கான அறிவிப்பைப் பெற்ற இரண்டு மாதங்களுக்குள் கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருந்தக்கூடிய கட்டணத்தால் பாதிக்கப்பட்ட அட்டைதாரரின் கருத்து முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு ஆர்பிஎல் வங்கி உறுதியான மற்றும் நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளும். அத்தகைய முயற்சிக்குப் பிறகு சுட்டிக் காட்டப்பட்ட கட்டணம் சரியானது என ஆர்பிஎல் வங்கி தீர்மானிக்கும் பட்சத்தில், விற்பனைச் சீட்டின் நகல் அல்லது கட்டணக் கோரிக்கை உள்ளிட்ட விவரங்களுடன் அட்டைதாரருக்கு அதைத் தெரிவிக்கும். பகிரப்பட்ட நெட்வொர்க் ஏடிஎம் பரிவர்த்தனை தொடர்பான எந்தவொரு முரண்பாடும் விசா/மாஸ்டர்கார்டு/என்பிசிஐ விதிமுறைகளுக்கேற்பத் தீர்க்கப்படும். பகிரப்பட்ட நெட்வொர்க்குகளைக் கொண்டு அட்டைதாரர் மேற்கொள்ளும் எந்தப் பரிவர்த்தனைகளுக்கும் ஆர்பிஎல் வங்கி பொறுப்பேற்காது. பகிரப்பட்ட நெட்வொர்க் ஏடிஎம் தொடர்பாக அட்டைதாரருக்கு ஏதேனும் புகார்கள் இருக்கும் சூழ்நிலையில், பகிரப்பட்ட நெட்வொர்க்குடன் தான் அட்டைதாரர் அதைத் தீர்க்க வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினால் ஆர்பிஎல் வங்கிக்கான எந்தக் கடமைகளிலிருந்தும் அவரை விடுவிக்க முடியாது. ஆனாலும் கூட, அந்தப் புகாரை அட்டைதாரர் ஆர்பிஎல் வங்கிக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். இழப்பீடு மற்றும் பாதுகாப்புக் கொள்கை பற்றி அறிய, https://rb.gy/2m0ir என்பதை கிளிக் செய்யவும்

நிர்வாகச் சட்டம் மற்றும் சட்ட வரம்பு:

விதிமுறைகளினால் ஏற்படும் எந்தவொரு சட்ட நடவடிக்கையும் அல்லது நடைமுறைகளும் இந்தியாவில் உள்ள மும்பையில் உள்ள நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்களில் கொண்டு வரப்பட்டு, அந்த நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தின் அதிகார வரம்பிற்குத் திரும்பப் பெற முடியாமல் சமர்ப்பிக்கப்படும் என்பதை ஆர்பிஎல் வங்கியும், அட்டைதாரரும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனாலும் கூட, இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் இருந்து ஏற்படும் எந்தவொரு சட்டப்பூர்வ அல்லது நடவடிக்கைகளை வேறு ஏதேனும் நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது பிற பொருத்தமான மன்றத்தில் ஆர்பிஎல் தொடங்கலாம், இதன் மூலம் அட்டைதாரர் அந்த சட்ட அதிகார வரம்பிற்கு ஒப்புக் கொள்கிறார். இந்த விதிமுறைகள் இந்திய சட்டங்களின்படி நிர்வகிக்கப்படும் மற்றும் கட்டமைக்கப்படும்.

மாற்றங்களுக்கான அறிவிப்பு:

எந்த நேரத்திலும் வட்டிக் கட்டணங்கள் அல்லது விகிதங்கள் மற்றும் கணக்கீட்டு முறைகளைப் பாதிக்கும் மாற்றங்கள் உட்பட, அட்டையில் வழங்கப்படும் விதிமுறைகள், அம்சங்கள் மற்றும் பலன்களில் ஏதேனும் ஒன்றைத் திருத்தவோ அல்லது சேர்க்கவோ ஆர்பிஎல் வங்கி முழுமையான சுயாதீன உரிமையைக் கொண்டுள்ளது. அட்டையின் கீழ் உள்ள அனைத்துத் தொகைகளும் முழுமையாகத் திருப்பிச் செலுத்தப்படும் வரை, இந்தத் திருத்தப்பட்ட விதிமுறைகளின் கீழ் ஏற்படும் அனைத்துக் கட்டணங்களுக்கும், மற்ற அனைத்துக் கடமைகளுக்கும் அட்டைதாரர் பொறுப்பாவார். திருத்தப்பட்ட விதிமுறைகளை ஆர்பிஎல் வங்கியின் இணையதளத்திலோ அல்லது ஆர்பிஎல் வங்கி முடிவு செய்கின்ற வேறு ஏதேனும் முறையிலோ ஆர்பிஎல் வங்கி தெரிவிக்கலாம். ஆர்பிஎல் வங்கியின் இணையதளத்தில் வெளியிடப்படும் திருத்தங்கள் உட்பட இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தவறாமல் பார்க்க வேண்டியது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். விதிமுறைகளில் செய்யப்பட்ட மாற்றத்தின் விளைவாக அட்டைதாரர் அட்டையை நிறுத்த விரும்பினால், ஆர்பிஎல் வங்கியின்

இணையதளத்தில் தெரிவிக்கப்பட்ட/திருத்தப்பட்ட விதிமுறைகளை பதிவேற்றம் செய்த நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அவர் அதைச் செய்யலாம். ஆனாலும், அத்தகைய திருத்தப்பட்ட விதிமுறைகளின் அறிவிப்பிற்குப் பின்னர் தொடர்ந்து அட்டையைப் பயன்படுத்தினால், திருத்தப்பட்ட விதிமுறைகளை அவர் ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும். விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றம் செய்யப்படும் போது, அவை செயல்படுத்தப்படும் தேதிக்கு ஒரு மாதத்திற்கு முன்பு, மேற்கூறிய முறையில், அட்டை உறுப்பினருக்குத் தெரிவிக்கப்படும்.

இன்டர்நெட் இணையதளப் பயன்பாடு:

அட்டையானது உள்நாட்டில் பயன்படுத்தப்படும் அட்டையாக இல்லாவிட்டால், இந்தியாவிலும், வெளிநாட்டிலும் உள்ள அனைத்து இணைய வலைத்தளங்களிலும் அட்டைதாரர் (ஆர்பிஎல் வங்கியால் வேறுவிதமாகத் தெரிவிக்கப்பட்டால் தவிர) அட்டையைப் பயன்படுத்தலாம். பரிவர்த்தனைக்கான தொகை உடனடியாக அட்டையுடன் இணைக்கப்பட்ட கணக்கில் பற்று வைக்கப்படுகிறது. அட்டை எண், காலாவதித் தேதி, அட்டை சரிபார்ப்பு மதிப்பு (CVV), பாதுகாப்பு இலக்கங்கள் மற்றும் ஒரு முறை கடவுச்சொல் (OTP) ஆகியவற்றின் மூலம் அட்டை செயல்படும். பொருட்கள் மற்றும் சேவைகளின் அளிப்பு உட்பட அட்டைதாரர் இணையத்தளத்தின் மூலம் செய்கின்ற எந்தவொரு பரிவர்த்தனை குறித்தும் வங்கி பொறுப்பேற்காது, இணையத்தளத்தின் மூலம் செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனை குறித்தும் அட்டைதாரருக்கு ஏதேனும் புகார்கள் இருந்தால், அந்த விஷயத்தை அட்டைதாரர் அந்த வணிகரிடம் தான் தீர்த்துக் கொள்ள வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினால் வங்கிக்கான எந்தக் கடமைகளிலிருந்தும் அவர் விடுவிக்கப்பட மாட்டார். இருப்பினும், அட்டைதாரர் இந்த புகாரை உடனடியாக வங்கிக்கு தெரிவிக்க வேண்டும். பரிவர்த்தனைத் தொகையுடன் சேர்த்து எந்தவொரு இணையத்தளத்தாலும் கூடுதல் கட்டணம் விதிக்கப்பட்டு, அட்டைதாரரின் கணக்கில் பற்று வைக்கப்படுவதற்கு வங்கி எந்தப் பொறுப்பையும் ஏற்காது. ஏதேனும் கட்டணம் அல்லது பிறவற்றுக்குப் பணம் செலுத்துவதற்காக ஏதேனும் இணையத்தளத்திடம் இருந்து வங்கியால் பெறப்பட்ட கோரிக்கையும், அட்டை தொலைந்துவிட்டாலோ, திருடப்பட்டாலோ அல்லது

மோசடியாகப் பயன்படுத்தப்பட்டாலோ தவிர, அத்தகைய கோரிக்கையின் மீது பதிவுசெய்யப்பட்ட கட்டணம் அட்டைதாரரால் இணைய இணையதளத்தில் சரியாகச் செலுத்தப்பட்டது என்பதற்கான உறுதியான சான்றாகும். அதற்கான ஆதாரத்திற்கான பொறுப்பு அட்டைதாரரையே சாரும். பிழையின் காரணமாகவோ அல்லது பொருளைத் திருப்பியளித்ததன் காரணமாகவோ நிறைவு செய்யப்பட்ட ஒரு பரிவர்த்தனையை அட்டைதாரர் ரத்து செய்ய விரும்பினால், இணைய தளத்தில் முந்தைய பரிவர்த்தனையை ரத்து செய்ய வேண்டும், ரத்து செய்யப்பட்ட ரசீதின் மின்னணு நகலை அட்டைதாரர் தன்வசம் வைத்திருக்க வேண்டும். அத்தகைய பரிவர்த்தனைகளின் காரணமாக பற்றுகளை திரும்பப்பெறுதல்/ரீஃபண்டு செய்தல் கைமுறையாகச் செயல்படுத்தப்படும், கேட்கப்படும் போது ரத்து செய்யப்பட்ட ரசீதின் மின்னணு நகலை அட்டைதாரர் சமர்ப்பிக்க வேண்டும்.

காப்பீட்டுப் பலன்:

காப்பீட்டு நிறுவனத்துடனான இணைப்பின் மூலம் ஆர்பிஎல் வங்கி அவ்வப்போது பல்வேறு காப்பீட்டுப் பலன்களை இந்த அட்டையின் கீழ் அட்டைதாரருக்கு வழங்கலாம். அத்தகைய காப்பீட்டுப் பாதுகாப்பு தொடர்பாக ஏதேனும் குறைபாடு அல்லது குறைபாடு ஏற்பட்டால் அல்லது இழப்பீடு, செயலாக்கம் அல்லது தீர்வு ஆகியவற்றில் ஏதேனும் குறைபாடு அல்லது முரண்பாடு ஏற்பட்டால், அத்தகைய காப்பீட்டுத் தொகையுடன் அல்லது அதனுடன் இணைந்து எழும் எந்தவொரு விஷயத்திற்கும் அவர் ஆர்பிஎல் வங்கியைப் பொறுப்பாக்க மாட்டார் என்பதை அட்டைதாரர் குறிப்பாக ஒப்புக்கொள்கிறார். உரிமைகோரல்கள் அல்லது வேறுவிதமாக இருந்தாலும், அத்தகைய அனைத்து விஷயங்களும் காப்பீட்டு நிறுவனத்திடம் நேரடியாகப் பேசித் தீர்க்கப்படும். உரிமைகோரலைத் தீர்ப்பதற்கு காப்பீட்டு நிறுவனம் மட்டுமே பொறுப்பாகும். மேலும், எந்த நேரத்திலும் ஆர்பிஎல் வங்கி (தனது சொந்த விருப்பத்தின் பேரிலும், அட்டைதாரருக்கு எந்தவித அறிவிப்பையும் வழங்காமல் அல்லது அதற்கான காரணத்தை தெரிவிக்காமல்) அத்தகைய காப்பீட்டுத் தொகையின் பலனை இடைநிறுத்தலாம், திரும்பப் பெறலாம் அல்லது ரத்து செய்யலாம் என்பதையும் அட்டைதாரர் ஒப்புக் கொள்கிறார், மேலும் அந்தப் பலனைத் தொடர்வதற்காக ஆர்பிஎல் வங்கியைக் கட்டுப்படுத்தும் கடமை எதுவும் இருக்காது. உங்கள் டெபிட் கார்டு மீதான காப்பீடு பற்றி

மேலும் அறிந்து கொள்ள, https://bit.ly/3ngE9p0 என்ற இந்த URL- ஐக் கிளிக் செய்யவும்

பொறுப்புகள்:

- வாடிக்கையாளர் டெபிட் கார்டு எண், கிரெடிட் ,நெட் பேங்கிங் ஐடி & கடவுச்சொல், பின் எண், CVV எண், மொபைல் பேங்கிங் செயலி (மோபேங்க்) போன்ற முக்கியமான விவரங்களை வெளியிடுவதன் காரணமாக ஏற்படும் கணக்கை தவறாகப் பயன்படுத்துதல்/அங்கீகரிக்காமல் பயன்படுத்துதல் மற்றும்/அல்லது பாதுகாப்பு மற்றும் இரகசியத்தன்மை தேவைப்பாடுகளை வாடிக்கையாளர் பின்பற்றத் தவறும் சூழ்நிலை ஆகியவற்றின் விளைவாக வாடிக்கையாளருக்கு இழப்பு ஏற்படும் பட்சத்தில், வங்கி எந்த விதத்திலும் பொறுப்பாகாது/பொறுப்பேற்காது என்பதை வாடிக்கையாளர் ஒப்புக் கொண்டு, நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- கணினிகள் / எலக்ட்ரானிக்ஸ் / டிஜிட்டல் இயந்திரங்கள் மற்றும் வழிமுறைகள் போன்றவற்றுக்கு உறுப்பினராக இணையும் போது, அவற்றின் முழுமையான வேலை செய்யும் அறிவை வாடிக்கையாளர் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் மற்றும் உத்தரவாதம் அளிக்கிறார்.
- மேலே பட்டியலிடப்பட்டுள்ள மின்னணு வங்கிச் சேனல்களைப் பயன்படுத்துவதில் உள்ள அபாயங்கள், பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்தும், உரிய பரிசீலனைக்குப் பிறகு வங்கியிடமிருந்து அந்த வசதியைப் பெற்றுள்ளார் என்பதையும் வாடிக்கையாளர் அறிந்திருக்க வேண்டும்.
- மின்னணு சாதனங்களின், அதாவது செல்போன்கள் அல்லது எலக்ட்ரானிக் உபகரணங்கள்/ வன்பொருள்/ செயலிகள், மடிக்கணினிகள், டேப்லெட்டுகள் போன்றவற்றின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு வாடிக்கையாளரே பொறுப்பாவார்,
- வாடிக்கையாளருக்கானதாக இல்லாத பொது டொமைனில் இருந்து ஏதேனும் தரவுகள் அல்லது விவரங்கள் எஸ்எம்எஸ், மின்னஞ்சல், கடிதங்கள், தொலைபேசி அழைப்புகள், விழிப்பூட்டல்கள் மூலம் கிடைக்கும் பட்சத்தில், அவர் உடனடியாக வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.

- ஐடி, கடவுச்சொல், பின் எண், எம்-பின், அட்டை விவரங்கள் உள்ளிட்ட கணக்குச் சான்றுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு வாடிக்கையாளர் அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.
- ஆர்பிஎல் வங்கியின் பிரதிநிதிகள் அட்டை விவரங்கள், CVV, பின் எண்கள் மற்றும் OTP ஆகியவற்றைக் கேட்டு வாடிக்கையாளரை அழைக்க மாட்டார்கள். அவற்றை யாருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
- டெபிட் கார்டை தவறாகப் பயன்படுத்துதல்/அங்கீகரிக்கப்படாமல் பயன்படுத்துதல் நடைபெறுகிறது என ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால், வாடிக்கையாளர் உடனடியாக 18001 026 222 என்ற எண்ணில் ஆர்பிஎல் வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்தை அழைப்பதன் மூலம் அந்த டெபிட் கார்டில் பரிவர்த்தனைகளைத் தடுக்க வேண்டும்.
- மோசடியாளரிடம் வாடிக்கையாளர் ஏதேனும் விவரங்களை பகிர்ந்து கொண்டிருக்கும் பட்சத்தில், அதற்கு வங்கி பொறுப்பேற்காது.
- கூடுதல் விவரங்களுக்கு, ஆர்பிஎல் வங்கியின் இணையதளத்தில் உள்ள விரிவான டெபிட் கார்டு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைக் காணவும்.
- வாடிக்கையாளரின் அட்டையை தவறாகப் பயன்படுத்தினால்/திருட்டுப் போனால்/தொலைந்து போனால், மின்னணு வழிமுறையில் இருந்து பதிவு-நீக்கம் செய்வதற்கு அவர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- கணக்கு தவறாகப் பயன்படுத்தப்பட்டால்/அங்கீகரிக்கப்படாமல் பயன்படுத்தப்பட்டால், கொடுக்கப்பட்ட வழிமுறைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் உடனடியாக வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.
- பயனாளர் ஐடி, மொபைல் செயலி மற்றும்/ அல்லது பதிவுசெய்யப்பட்ட மொபைல் எண்/ மின்னஞ்சல் ஐடி மற்றும் எம்-பின்/ OTP/ கடவுச்சொல்/ CVV ஆகியவற்றைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு செல்லுபடியாகும் பரிவர்த்தனையும், வாடிக்கையாளரால் முறையாகத் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வாடிக்கையாளர் குறை தீர்ப்பு

எங்கள் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்வதற்கு உங்கள் புகார்கள் ஒரு வாய்ப்பாக இருப்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம். நாங்கள் அனைத்து புகார்களையும் நியாயமாகவும், நேர்மையாகவும், கடுமையான தரநிலைகள் மற்றும் நேர அளவீடுகளுடன் கையாள்வோம். போட்டி நிறைந்த வங்கித் துறையின் தற்போதைய சூழ்நிலையில், வாடிக்கையாளர் சேவையில் சிறந்து விளங்குவது என்பது நீடித்த வணிக வளர்ச்சிக்கான மிக முக்கியமான கருவியாகும். எந்தவொரு கார்ப்பரேட் நிறுவனத்திலும் வாடிக்கையாளர் புகார்கள் என்பது வணிக நடைமுறையின் ஒரு பகுதியாக விளங்குகிறது. ஒரு சேவை நிறுவனமாக, வாடிக்கையாளர் சேவை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றிலேயே நாங்கள் முக்கியக் கவனம் செலுத்துகிறோம். புதிய வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கு மட்டுமல்லாமல், ஏற்கனவே உள்ளவர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் உடனடியான, திறமையான சேவையை வழங்க வேண்டியது அவசியம் என நாங்கள் நம்புகிறோம். "அவுட் சர்வீஸ்" வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் சிறந்த புகார்களை நிவர்த்தி செய்யும் செயல்முறையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு எங்கள் வங்கி பல முன்னெடுப்புகளைக் கொணர்ந்துள்ளது. விவரங்களுக்குக் கீழே உள்ள இணைப்பைக் கிளிக் செய்வதன் மூலம் எங்கள் வாடிக்கையாளர் குறை தீர்ப்புக் கொள்கையைக் காணவும்.

வாடிக்கையாளர் குறைதீர்ப்புக் கொள்கை

உங்கள் குறைகளைத் தீர்ப்பதற்காக ஒரு உள்ளார்ந்த மேல்முறையீடு மேட்ரிக்ஸை வங்கி அமைத்துள்ளது, கீழேயுள்ள இணைப்பை கிளிக் செய்வதன் மூலம் அதனை அணுகலாம்: http://bitly.ws/suvN

பிற விவரங்கள்

பிரத்தியேக ஹெல்ப்லைன்:- 18001 026 222
வாடிக்கையாளர் சேவை: 022 6232 7777
பிரத்தியேக மின்னஞ்சல் முகவரி :- Customercare@rblbank.com

டெபிட் அட்டை தொலைந்து போகுதல், திருட்டு அல்லது அங்கீகரிக்கப்படாத பயன்பாடு குறித்துப் புகார் தெரிவிப்பதற்கு, +91 22 6232 7777 அல்லது 18001 026 222 என்ற எண்ணிற்கு அழைக்கவும் அல்லது மோபேங்க்-ல் லாக்-இன் செய்து "உங்கள் அட்டைகளை நிர்வகிக்கவும்" என்பதற்குச் செல்லவும் அல்லது நெட் பேங்கிங்கில் உள்ள வேண்டுகோள்கள் என்பதற்குச் சென்று உங்கள் அட்டையைத் தடை செய்யவும். மேலும் விவரங்களுக்கு, பின்வரும் URL -ஐக் கிளிக் செய்யவும்: http://bitly.ws/suwH

பொறுப்புத் துறப்பு:

ஆர்பிஎல் வங்கி, தனது சுயாதீன விருப்பத்தின் பேரில், தயாரிப்புகள்/சேவைகள் தொடர்பாக வெளிப்புற சேவை வழங்குநர்/கள் அல்லது முகவர்/கள் மற்றும் தேவைப்படும் அல்லது அவசியமான விதிமுறைகளின் அடிப்படையில் அவர்களின் சேவைகளைப் பயன்படுத்தலாம்.

அட்டையை மதித்தல்: அட்டையை விரும்பிய முறையில் மதிக்கா விட்டாலோ, அல்லது ஏடிஎம் அழிந்துவிட்டாலோ, மின்சாரம் துண்டிக்கப்பட்டதனால் செயல்படாமல் இருந்தாலோ, தற்காலிகமாக ஏடிஎம் -இல் பணம் இல்லை என்றாலோ அட்டைதாரருக்கு வங்கி எந்தச் சூழ்நிலையிலும் பொறுப்பாகாது. அதனால் ஏற்படும் எந்தவொரு பின் விளைவு அல்லது மறைமுக இழப்பு அல்லது சேதத்திற்கும் வங்கி பொறுப்பேற்காது.

பொறுப்பின் வரம்பு: நேரடி அல்லது மறைமுக, சிறப்பு, தற்செயலான அல்லது அதன் விளைவாக ஏற்படும் சேதங்கள், இழப்புகள் அல்லது ஆர்பிஎல் வங்கியின் இணையதளம் அல்லது அதன் பயன்பாடு அல்லது பயன்படுத்த இயலாமை, வாடிக்கையாளரால் பயன்படுத்த இயலாமை, பிழை, விடுபடுதல், குறுக்கீடு, குறைபாடு, செயல்பாட்டில் அல்லது பரிமாற்றத்தில் தாமதம் , கணினி வைரஸ் அல்லது லைன் அல்லது கணினி தோல்வி தொடர்பாக ஏற்படுபவை உள்ளிட்ட எந்தவொரு சேதங்களுக்கும் ஆர்பிஎல் வங்கி எந்த சூழ்நிலையிலும் பொறுப்பாகாது.

- மின்னணு வங்கிச் சேவை வசதியைப் பெற்றுள்ள மொபைல் இணைப்பு/ சிம் கார்டு/ மொபைல்போன் தொடர்பான அனைத்து சட்டப்பூர்வ, இணக்கத்தன்மை மற்றும் அனைத்து வணிக விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் வாடிக்கையாளர் பொறுப்பும், கடமையும் உடையவராவார், இது தொடர்பாக எந்தவொரு பொறுப்பையும் வங்கி ஏற்கவில்லை/ஒப்புக் கொள்ளவில்லை.
- மொபைல் எண், மின்னஞ்சல் முகவரி, முகவரி உள்ளிட்ட தொடர்பு விவரங்களில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டால் அது குறித்து ஆர்பிஎல் வங்கிக்குத் தெரிவிப்பதும், வங்கி வகுத்துள்ள செயல்முறைக்கேற்ப வங்கியின் பதிவுகளில் அந்த விவரங்களைப் புதுப்பிப்பதும் வாடிக்கையாளரின் பொறுப்பாகும். வாடிக்கையாளர் வங்கியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவார்
- வங்கி வகுத்துள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியது கண்டறியப்பட்டால், டெபிட் கார்டு பயன்பாட்டைத் தடுப்பதற்கு/ திரும்பப் பெறுவதற்கு வங்கிக்கு அதிகாரம் உள்ளது.